விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 09 வள்ளுவர் ஆண்டு 2039 பங்குனி 24 ஞாயிற்றுக்கிழமை (06.04.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 109




## ஜே.வி.பி. இல்லை என்றால்

# இலங்கை இந்தியாவின் மைதானமாகியிருக்கும்

### தியாகிகள் தினத்தில் சோமவன்ச ஆவேஷ உரை

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணி என்ற ஒரு கட்சி இல்லாவிட்டால் இலங்கை இந்தியாவின் கால் பந்தாட்ட மைதானமாக மாறியிருக்கும். நோர்வே உட்பட ஏகாதிபத்திய நாடுகளின் மேலாதிக்கக் கோட்டையாக இலங்கை மாறியிருக்கும். இதனை நாமே தடுத்து நிறுத்தி இருக்கின்றோம் இவ்வாறு ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க கூறினார். *(10 ஆம் பக்கம் பார்க்க)*

### மடு மாதாவின் திருச்சொரூபத்தைத் தொடர்ந்தும் தேவன்பிட்டியில் வைத்திருப்பதெனத் தீர்மானம்

## நாளை புலிகளுடன் சந்திப்பு

(மன்னார்)

மடு மாதாவின் திருச்சொரூபத்தைத் தொடர்ந்தும் தேவன்பிட்டி புனித சவேரியார் ஆலயத்தில் வைத்திருப்பது, வவுனியாவில் நாளை திங்கட்கிழமை மௌன ஊர்வலத்தை நடத்துவது என்பன உட்பட 6 தீர்மானங்கள் நேற்று மன்னார் ஆயரின் இல்லத்தில் நடைபெற்ற விசேட கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளன. *(10 ஆம் பக்கம் பார்க்க)*

# வன்னியை மீட்கும் நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்படும்

## பாதுகாப்பு அமைச்சு மீண்டும் அறிவிப்பு

(கொழும்பு)

வன்னிப் பகுதியை விடுவிக்கும் மனித நேய நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

மன்னார் மற்றும் மணலாறு ஆகிய பகுதிகளில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளை நோக்கி இராணுவத்தினர் வெற்றிகரமாக முன்னேறி வருவதாகத் தேசிய பாதுகாப்பு ஊடக நிலையம் அறிவித்துள்ளது.

இந்தப் பகுதிகளில் இடம்பெற்ற மோதல்களில் 15 விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டிருப்பதாகவும் இராணுவத் தரப்பில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் 7 பேர் காயமடைந்திருப்பதாகவும் ஊடக நிலையம் அறிவித்துள்ளது.

மன்னாரிலுள்ள விடுதலைப்புலிகளின் மோட்டார் ஏவுகணை நிலையமும் விமானத் தாக்குதலில் அழிக்கப்பட்டிருப்பதாக இராணுவத்தினர் தெரிவிக்கின்றனர்.

மணலாறு ஆந்தன்குளம், ஜனகபுரம் வடக்கு ஆகிய பகுதிகளில் இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் நடைபெற்ற மோதலில் 6 பேர் கொல்லப்பட்டிருப்பதாகவும் விடுதலைப் *(10 ஆம் பக்கம் பார்க்க)*

### பஞ்சலிங்கத்தின் இறுதிக் கிரியை இன்று

(யாழ்ப்பாணம்)



இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளரும் யாழ்.கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளருமான தம்பிப்பிள்ளை பஞ்சலிங்கத்தின் இறுதிக் கிரியைகள் இன்று நடைபெறும்.

அன்னாரின் இறுதிக் கிரியைகளிலும் இறுதி ஊர்வலத்திலும் அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விச் சமூகத்தினர் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு *(10 ஆம் பக்கம் பார்க்க)*

# விமல் வீரவன்ச விவகாரம் ஜே.வி.பி. பிளவுறும் சாத்தியம்



(கொழும்பு)

ஜே.வி.பி. கட்சியின் பிரசாரச் செயலாளரும் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான விமல் வீரவன்சவைக் கட்சியிலிருந்து இடைநிறுத்துவதாக ஜே.வி.பியின் மத்திய குழு நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

இதனையடுத்து ஜே.வி.பி., இரண்டாகப் பிளவுபடும் நிலை தோன்றியுள்ளது. கட்சியின் கொள்கைகளுக்கு முரணாக நடந்து கொண்டதற்காகவே அவரைக் கட்சியிலிருந்து நீக்குவதாக ஜே.வி.பி. மத்திய குழு உறுப்பினர் லால்காந்த தெரிவித்துள்ளார்.

கிழக்குத் தேர்தலில் போட்டியிடுவதாயின் துணைப்படைக் குழுவான பிள்ளையான் குழுவின் ஆயுதங்கள் களையப்படக் கூடாது என்பதில் விமல் வீரவன்ச உறுதியுடன் நின்றார். ஆனால் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க பிள்ளையான் குழுவின் ஆயுதங்களைக் களைய வேண்டும் என்று கருத்துத் தெரிவித்து வந்தார்.

பிள்ளையான் குழுவின் ஆயுதங்கள் களைய வேண்டும் என்று சோமவன்ச அமரசிங்க பகிரங்கமாக மேடைகளில் உரையாற்றி வந்தார். இதனால் விசனமடைந்த விமல் வீரவன்ச தாம் கலந்து கொள்ளும் மேடை நிகழ்வுகளில் பிள்ளையான் குழுவின் ஆயுதங்களைக் களைய வேண்டியதில்லை என்றும் அப்படிக் களைவதால் பிள்ளையான் குழுவின் பாதுகாப்புக் கேள்விக் குறியாகிவிடும் என்றும் உறுதியாகக் கூறிவந்தார்.

அத்துடன் அரசாங்கத்துக்குச் சார்பான தொரு நிலைப்பாட்டையே அவர் தொடர்ந்தும் எடுத்து வந்தார். *(02 ஆம் பக்கம் பார்க்க)*

**மிதிவெடி விழிப்புணர்வு தினம் : ஏப்ரல் 1 - 14**

எமது பிரதேசத்துக்கு வரும் புதியவர்களுக்கு, எமது பகுதிகளின் மிதிவெடி அபாய பிரதேசங்கள் பற்றித் தெரியப்படுத்துவோம்.

'சர்வோதயம்' 'யுனிசெவ்'

# ஆளும் கட்சியும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளும் இணைந்திருப்பதால் விசேட தேர்தல் பிரசாரம் அவசியம் இல்லை- பசில் ராஜபக்ஷ

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளும் இணைந்து வெற்றிலைச் சின்னத்தில் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதால் விசேட தேர்தல் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய தேவை இல்லை என ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் இடம்பெயர்ந்தவர்களில் 90 வீதமானவர்கள் மீளக் குடியமர்த்தப்பட்டு அங்கு ஜனநாயகத்தை நிலைநாட்டியுள்ளோம்.

பெரும்போகத்தின் மூலம் 25 வீதமான நெல் உற்பத்தி கிடைக்கிறது.

கிழக்கின் உதயம் அபிவிருத்தித்திட்டத்தின் மூலம் 46 பிரதேச செயலாளர்கள் பிரிவிலுள்ள பாடசாலைகள், வைத்தியசாலைகள், வர்த்தக நிலையங்களை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம் எனக் குறிப்பிட்டிருக்கும் பசில் ராஜபக்ஷ, இவ்வாறானதொரு நிலையில் கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்கு தனியான தேர்தல் பிரசாரம் ஒன்று அவசியமில்லை எனக் கூறியுள்ளார்.

கிழக்கு மாகாண மக்கள் தமது நன்றிக் கடன்களை அரசாங்கத்திற்கு ஏற்கனவே தெரிவித்துவிட்டனர்.

எதிர்வரும் மே மாதம் 10 ஆம் திகதி நடைபெறவிருக்கும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்காக அங்கீகரிக்கப்பட்ட 25 கட்சிகள் மற்றும் 57 சுயேட்சைக்குழுக்களைச் சேர்ந்த 1342 பேர் வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளனர். 38 ஆசனங்களுக்காக 1342 பேர் போட்டியிடுகின்றனர்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலுக்கு 9 இலட்சத்து 82ஆயிரத்து 700 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் கட்சிகள் தேர்தல் பிரசாரப் பணிகளில் ஈடுபட்டுள்ளன.

எனினும் அடுத்தவாரம் சிங்கள, தமிழ் புத்தாண்டு கொண்டாடப்படவிருப்பதால் வருடப் பிறப்பின் பின்னரே தேர்தல் பிரசார நடவடிக்கைகள் சூடுபிடிக்கும் என அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

கடந்த புதன்கிழமை வேட்பு மனுத்தாக்கல் செய்யப்பட்ட பின்னர் தமது கட்சி பிரசார நடவடிக்கைகளை ஆரம்பித்துவிட்டதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

வருடப்பிறப்பிற்கு பின்னர் பிரசார நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி மகிந்த ராஜபக்ஷ நிர்வாகத்தில் இடம்பெறும் மோசடிகளை மக்களுக்கு வெளிக்காட்டும் நோக்கில் பிரசார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என அவர் கூறியுள்ளார். (ந-5)

## 2 ஆயிரம் பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் கிடைக்கும்

(கொழும்பு)

ஆசிரியர்கள் சேவைக்காக 2 ஆயிரம் பட்டதாரிகள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாகக் கல்வி அமைச்சின் செயலாளர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

இதற்குரிய நேர்முகப் பரீட்சை அடுத்த மாதம் இடம்பெறவுள்ளதாகவும் அவர் கூறினார். தேசிய பாடசாலைகளுக்கு ஆசிரியர்களைச் சேர்த்துக் கொள்வதற்காகப் பரீட்சைகள் திணைக்களத்தினால் அண்மையில் போட்டிப் பரீட்சை இடம்பெற்றது.

இதில் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்கள் இந்த நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படவுள்ளதாகவும் போட்டிப்பரீட்சையின் பெறுபேறுகள் கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளுக்குத் தெரிவு செய்யப்படும் பட்டதாரிகள் நியமிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-2)

## ஜனாதிபதி மகிந்தவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம்!

### ஐ.தே.கட்சி தீவிர முயற்சி

(கொழும்பு)

ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றை கொண்டுவருவது குறித்து ஐக்கிய தேசியக் கட்சி ஆராய்ந்து வருகிறது.

அரசியலமைப்பு சபையை நியமிக்காமை மற்றும் அரசியலமைப்புக்கு முரணான செயற்பாடுகளுக்கு எதிராக, நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை கொண்டுவருவது குறித்து தாங்கள் நடவடிக்கை எடுத்து வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இலங்கையின் அரசியலமைப்பில் ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவருவது சிக்கலான விடயம் என்றும் அதனை எவ்வாறு கையாள்வது என்பது குறித்து தாங்கள் தீவிரமாக கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-5)

## தேர்தல் ஆணையாளரை ரணில் சந்தித்துப் பேசுவார்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அடுத்த வாரம் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

அடுத்த செவ்வாய்க்கிழமை நடைபெறவிருக்கும் இந்தச் சந்திப்பில் கிழக்கு மாகாணத்தில் பல்வேறு விடங்கள் குறித்துக் கலந்துரையாடப்படும் எனத் தெரியவருகின்றது.

தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் மற்றும் சட்டவிரோத ஆயுதக் குழுக்களின் ஆயுதங்க ளைக் களைவது பற்றி இந்தச் சந்திப்பில் கோரிக்கை விடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கிழக்கு மாகாண சபைத் தேர்தல்கள் தொடர் பாகக் கடந்த வாரம் கலந்துரையாடல்களை நடத்தியிருந்த ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் முக்கிய விடயங்கள் பற்றி விரிவாகக் கலந்துரையாடியுள்ளன. சர்வதேச கண்காணிப்பாளர்களை வரவழைப்பது தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப் பட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ந-5)


**மனம் மகிழ் திருமண சேவை**

எம்மிடம் 18 வயது தொடக்கம் 45 வயது வரையிலான உள்நாட்டு, வெளிநாட்டு மணமகன், மணமகள் ஜாதகம் உண்டு. செவ்வாய் குற்றம், பாவம் கூடிய, குறைந்த, தாரம் இழந்த, விவாகரத்து பெற்ற ஆண்,பெண் இருபாலாருக்கும் தகுந்த துணை விரைவுபடுத்தப்பட்ட சேவையில் பொருத்தம் செய்யப்படும். முதற் கடிதத்திலேயே பூரண தகவல் தரவும்.

விபரங்களுக்கு:-
மனம் மகிழ் திருமண சேவை
T.K.ராஜா
185/5,கில்னர் லேன்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
(சி-949)



35 வருடங்களாக
1973 - 2008
தனித்துவம் பெற்ற நிறுவனத்தில்
O/L Day Class
ஏப்ரல் 10 இல் ஆரம்பம்
காலை 8.00 - பி.ப 1.00 வரை
இன்று முதல் பதியும் 30 மாணவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவர்
The Express Institute
Irupalai, Kopay. -அதிபர்


## விமல் வீர...

ஜனாதிபதியுடன், கட்சியின் கொள்கைகளுக்கு மாறாகத் தனியே பேச்சு நடத்தி வந்தார்.

குறிப்பாக வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்போது அரசைக் காப்பாற்றியதில் விமல் வீரவன்சவுக்குப் பெரும் பங்கிருந்தது என்று கூறப்படுகின்றது. இதனால் கட்சித் தலைமையுடனும் கட்சி மத்திய குழு உறுப்பினர்களுடனும் விமல் வீரவன்ச அண்மைக் காலமாகக் கருத்து முரண்பட்டிருந்தார்.

அத்துடன் நாடாளுமன்றத்திலும் தனது கருத்துக்களைப் பகிரங்கமாக வெளியிட்டு வந்தார். இந் நிலையிலேயே அவரைக் கட்சியிலிருந்து இடைநிறுத்தி வைப்பதாக ஜே.வி.பி. மத்திய குழு அறிவித்திருக்கின்றது.

அடுத்த வாரம் நாடாளுமன்றம் கூடவிருக்கும் நிலையில் விமல் வீரவன்ச அரச தரப்புக்குத் தாவும் சாத்தியங்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. குறிப்பாக அரச தரப்புடன் இணைந்து செயற்படும் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் நந்தன குணதிலக்கவுடன் இணைந்து விமல் வீரவன்ச செயற்படுவார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் ஜே.வி.பி. இரண்டு பிரிவாகப் பிளவுபட்டுள்ளது. ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச தலைமையில் ஒரு குழுவினரும் பிரசார செயலாளராகவிருந்த விமல் வீரவன்ச தலைமையில் இன்னொரு குழுவினரும் ஜே.வி.பிக்குள் செயற்பட ஆரம்பித்திருப்பதால் அக் கட்சிக்குள் குத்துவெட்டுக்கள் அதிகரிக்கும் சாத்தியக் கூறுகள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

1987 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இந்தியப் படைகளுக்கு எதிரான துண்டு பிரசுரங்களை விநியோகித்து அதன்மூலம் அரசியலுக்கு வந்த விமல் வீரவன்ச தமிழ் மக்களின் எதிர்ப்புக் கோஷத்தினாலேயே பேரினவாதச் சிங்கள மக்களிடத்தில் பிரபல்யம் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-5)


**வாழ்த்துகின்றோம்**

06.04.2008 இன்று இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் திருமண பந்தத்தில் இணையும் ஜெயக்குமார் -பபிலா தம்பதியினரை திருப்பதி வெங்கடாசலபதியினதும் ஸ்ரீ ராகவேந்தரினதும் அருள் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

கலியாணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்டு பூமியில் நடக்கும் என்று சொல்வார்கள். அது தவறு. திருமணம் பூமியில்தான் நிச்சயிக்கப்படுகிறது. பூமியில் தான் நடக்கிறது. அதை சொர்க்கம் ஆக்குவது உங்கள் கைகளில் தங்கியுள்ளது.

18, ராகவ வீர அவனியூ,
போயஸ் கார்டன்,
சென்னை 600086, இந்தியா

அன்புடன்,
S.S.R குடும்பம்.
(1066)



வெளிநாட்டில் உள்ளவர்களுடன் இன்ரநெற்றில் முகம் பார்த்து கதைப்பதற்கு ......

Internet Browsing




Internet Call 7/=
இந்தியாவிற்கான அழைப்பு 15/=

திருமுருகன் கொம் நெற்


## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 19 10 1921



மறைவு 21 03 2008

### பண்டிதர் க.சச்சிதானந்தன்

B.A(Hons) Lond, M.Phill (Lond), Ph.D (Jaffna),வானியல் வல்லுநர்.

*21.03.2008* அன்று எமது குலவிளக்காம் கணபதிப் பிள்ளை சச்சிதானந்தன் அவர்கள் காலமாகிய செய்தி கேட்டு நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் தொலைத் தொடர்புகள் நாளேடுகள் மூலமும் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் அன்னாரின் இறுதிக் கிரியையில் கலந்து கொண்டு தேவைகளைப் புரிந்தவர்களுக்கும் நோயுற்ற வேளை வைத்தியசாலையில் சேவைகள் செய்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு *09.04.2008* புதன்கிழமை அன்று காலை 7 மணியளவில் தும்பளை முத்துமாரி அம்மன் ஆலய அந்தியேட்டி மடத்தில் நடைபெற இருக்கும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகர நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வண்ணம்;
மனைவி, பிள்ளைகள்.

தும்பளை,
பருத்தித்துறை.

(சி-967)

# படைப்பரம்பலுக்காக

இராணுவத்தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு மேலும் பதவி நீடிப்பு வழங்கப்படுமா அல்லது வேறு தளபதி ஒருவர் நியமிக்கப்படுவாரா என்பது தொடர்பாகவும் பலத்த எதிர்பார்ப்புக்கள் தோன்றியுள்ளன.

முன்நகர்ந்து வரும் படையினரை எதிர்த்து விடுதலைப்புலிகள் மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதல்களையே நடத்தி வருவதுடன், அதிகளவில் மோட்டார் எறிகணைகளையும் பயன்படுத்தி வருகின்றனர்.

படைப் பரம்பலையே தாம் எதிர்பார்த்து காத்திருப்பதாக விடுதலைப்புலிகளின் சிறப்பு படையணிகளில் ஒன்றான சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவின் துணைத்தளபதி அமுதாப் தெரிவித்திருக்கிறார்.

இலங்கை பொருளாதார ரீதியில் மிகவும் வறுமையை நோக்கி செல்வதாக உலக பொருளாதார அமைப்புக்கள் தெரிவித்து வரும் நிலையில் பொருளாதார, அரசியல் மற்றும் படைத்துறை வழிகளில் அது இன்று ஒரு நெருக்கடியான கட்டத்தை அடைந்துள்ளது.

கிழக்கில் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதன் மூலம் தமிழ்பேசும் மக்களை இரு கூறுகளாக்கும் அரசியல் பணிகள் ஒருபுறம் மிக வேகமாக நடைபெற்று வருகையில், மறுபுறம் விரைவான ஒரு படைத்துறை செயதியை அரசு படை அதிகாரிகளிடம் வேண்டி நிற்கின்றது.

கிழக்கு மாகாணசபைத் தேர்தல், எதிர்வரும் சித்திரைப் புதுவருடம் என்பவற்றிற்கு முன்னர் கடந்த 12 மாதங்களாக இழுபட்டு

வரும் 56 ஆவது படையணியின் கட்டளை தளபதி பிரிகேடியர் ஜெகத் ரம்புக்கோத்த ஆகியோர் மேஜர் ஜெனரல்களாக பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

பொதுவாக உலகின் சிறப்பு மிக்க இராணுவக் கட்டமைப்பில் ஒரு டிவிசன் படையணியின் கட்டளை அதிகாரியாக மேஜர் ஜெனரல் தர அதிகாரிகள் கடமையாற்றுவதுண்டு. அந்த டிவிசனில் 15000 முதல் 25000 இராணுவத்தினர் இருப்பார்கள். ஆனால் இலங்கை படைக் கட்டமைப்பில் பிரிகேடியர் தர அதிகாரிகளே டிவிசன் படையணியின் கட்டளை அதிகாரிகளாக கடமையாற்றுவதுண்டு.

இதற்கு இலங்கை இராணுவத்தில் உள்ள டிவிசன் படையின் எண்ணிக்கையும் ஒரு காரணம். அதாவது இலங்கை இராணுவக் கட்டமைப்பில் 8000 முதல் 9000 (2 அல்லது 3 பிரிகேட்டுகளை கொண்ட) இராணுவததினரைக் கொண்டே ஒரு டிவிசன் ஆகும். சில டிவிசன்கள் களமுனைகளில் சிதைந்து 4000 தொடக்கம் 5000 பேரை கொண்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

வெற்றியை கொடுக்க மேஜர் ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய முனைந்து நிற்பதன் காரணமும் இதுவாக இருக்கலாம் என்பதும் உள்ளகத் தகவல் கள்.

இதனிடையே கடும் மோதல்கள், செறி வான எறி கணை வீச்சக் களின் மத்தி யில் மடுவை நோக்கிய படை நகர்வு மிகவும் உக்கி ரமான கட்டத்தை அடைந்துள்ளது. துரிதமாக முன் நகரும் நோக் குடன் இராணு வத்தினர் பெரு மளவில் எறி



கணைகளை ஏவிவருவதாகவும் அந்த பகுதி

மடுவை நோக்கி நகர்ந்துவரும் 57 ஆவது படையணியின் மூன்று பிரிகேட்டுகளும் மடுவை அரை வட்டவடிவில் சூழந்துள்ள போதும் பெரிய பண்டிவிரிச்சான் மற்றும் ஏ-14 வீதியின் மடுச் சந்தியினூடாக நகர்நதுவரும் படையினரே கடுமையான எதிர் தாக்குதல்களை சந்தித்து வருகின்றனர் என படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

எனினும் முன்நகர்ந்து வரும் படையினரை எதிர்த்து விடுதலைப்புலிகள் மட்டுப் படுத்தப்பட்ட தாக்குதல்களையே நடத்தி வரு

வதுடன், அதிகளவில் மோட்டார் எறிகணை

# காத்திருக்கும் புலிகள்

எனினும் களமுனை வெற்றிகளை குறிவைத்தே இந்த பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



இரண்டாம் உலகப் போரில் சோவியத்தின் ஸ்ராலின்கிரட் பகுதியில் தேங்கிப் போயிருந்த ஜேர்மனின் 6 ஆவது இராணுவத்தின் கட்டளைத் தளபதியான ஜெனரல் பர்லோஸ் பீல்ட் மார்ஷலாக கிட்லரினால் பதவி உயர்த தப்பட்டிருந்ததும் இங்கு நினைவு கூரத்தக் கது.

ஸ்ராலின்கிராட் பகுதியில் இடம்பெற்று வந்த கடும் மோதல்களில் தமது படையினரின் உளவுரனை அதிகரித்து வெற்றியை விரைவாக்க கிட்லர் அதனை மேற்கொண்டிருந்தார். ஆனால இறுதியில் பார்லோஸ் சரணடைந்து ஜேர்மனின் சரித்திரத்தை மாற்றியதுடன் (ஜேர்மன் வரலாற்றில் பீல்ட் மார்ஷல் சரணடைவதில்லை) ஜேர்மனின் புகழ்பெற்ற 6 ஆவது இராணுவமும் முற்றாக அழிந்து போனது.

இராணுவத்தரப்பை பொறுத் தவரையில் இராணுவத்தளபதி லெப். ஜெனரல் சரத் பொன் சேகாவுக்கு மேலும் பதவி நீடிப்பு வழங்கப்படுமா அல்லது வேறு தளபதி ஒருவர் நியமிக் கப்படுவாரா என்பது தொடர்பாகவும் பலத்த எதிர்பார்ப்புக்கள் தோன்றியுள்ளன.

மேஜர் ஜெனரல் பராக்கிரம பன்னிப்பிட்டிய ஓரங்கட்டப்பட்டுள்ளதனால், யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்திரசிறி அல்லது வவுனியா மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய இராணுவத்தளபதி சரத்பொன்சேகாவின் இடத்திற்கு நியமிக்கப்படலாம் என்ற எதிர்பார்ப்புக்களும் பலமாக எழுந்துள்ளன.

இலங்கை இராணுவத்தில் பொதுவாக யாழ். மாவட்ட அல்லது வன்னி மாவட்ட கட்டளைத் தளபதியாக இருப்பவர்களே இராணுவத் தளபதியாக எதிர்காலத்தில் நியமிக்கப்படுவதுண்டு.லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல கூட வெற்றி நிச்சயம் படை நடவடிக்கை காலத்தில் வவுனியா மாவட்ட கட்டளைத் தளபதியாக பதவி வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. அதாவது இந்த களமுனைகளில்தான் படைத்துறை தனது சிறந்த தளபதிகளை நியமிப்பதுண்டு.

மடுவை நோக்கிய படை நகர்வினை மிகவும் உக்கிரமாக மேற்கொண்டு ஒரு

வரும் மடு நோக்கிய படைநகர்வில் ஒரு இலக்கை எட்டுவதற்கு இராணுவம் கடும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்ற பாதுகாப்புச் சபைக் கூட்டத்திலும் இது விரிவாக ஆராயப்பட்டிருந்ததாக படைத் தரப்பு தெரிவித்துள்ளது. வழமையாக புதன்கிழமைகளில் கூடும் பாதுகாப்புச்சபைக் கூட்டம் கடந்தவாரம் வெள்ளிக்கிழமைக்கு பிற்போடப்பட்டிருந்தது. இந்த கூட்டத்தில் களமுனை தளபதிகளின் நேரடி கருத்துக்கள் கேட்டறியப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் தற்போதைய படை நடவடிக்கைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதுடன், பல முனைகளில் சிதறலடைந்துள்ள படையினரின் கவனத்தை ஒரு முனையில் செறிவாக்கி மிக விரைவான படைத்துறை வெற்றி செய்தி ஒன்றை பெறுவதற்கான உத்திகளும் ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதற்கமைய மன்னாரின் மடுவை நோக்கிய 57 ஆவது படையணியின் நகர்வுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. கடந்த 12 மாதங்களாக இழுபட்டுச் செல்லும் இந்த நடவடிக்கையின் இலக்கை அடைவதற்கு ஏதுவாக படையினரின் உளவுரனை அதிகரிக்கும் நோக்கத்துடன் அதன் கட்டளைத் தளபதியான பிரிகேடியர் ஜெகத் டயஸ மற்றும் இந்த படையணிக்கு தேவையான பின் தளவசதிகளை வழங்கி வருவதுடன், இந்த நடவடிக்கையில் பகுதியாக ஈடுபட்டு

எங்கும் அதிர்ந்து கொண்டிருப் பதாகவும் மன்னார் களமுனை தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதிகளவில் பயன்படுத்தப்படும் எறி கணை களின் கையிருப்புக்கள் மிகவும் விரைவில் தீர்ந்து வரு வதனால் இலங்கை அரசு பாகிஸ்தான் அர சிடம் அவசரமாக எறி கணைகளை தந்து தவுமாறு கேட்டுள்ளது. 60 மி.மீ, 81 மி.மீ, 120 மி.மீ மோட்டார் எறி கணைகள், 122 மி.மீ, 130 மி.மீ பீரங்கி எறி கணைகள், கையெறி குண்டுகள் என்பனவே அவசரமாக கோரப் பட்டுள்ளன.

தற்போதைய படை நடவடிக்கைகளில் இராணுவம் மிகவும் செறிவான எறி கணைகள் மற்றும் பல்குழல் உந்து கணைச் செலுத்திகளைப் பயன்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. கடந்த ஆண்டு நடைபெற்ற வாகரை மீதான படை நடவடிக்கையின்போதும் எறிகணைகள் மற்றும் பல்குழல் உந்துகணைகளின் கையிருப்புக்கள் தீர்ந்து போன நிலையில் அவை மீண்டும் வந்து சேரும வரையிலும் அரசு படை நடவடிக்கையை நிறுத்தி வைத்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

தற்போது மடு மீதான நடவடிக்கை மற்றும் அதனை தக்கவைப்பதற்கு தேவைப்படும் வெடிபொருட்களுக்காகவே இந்த அவசர கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன என்று கருதப்படுகிறது. மடுவைச் சுற்றியுள்ள பகுதிகளில் கடுமையான மோதல்கள் வெடித்துள்ளன. இதனை தொடர்ந்து மடுப்பகுதியில் எஞ்சியிருந்த மக்களும், கத்தோலிக் மதகுருக்களும் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

மடுத் தேவாலயத்தின் புனித மாதா சிலையும் தாக்குதலில் சிக்கி அழிந்து விடாது தடுக்கும் நோக்கத்துடன் அங்கிருந்து அகற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இலங்கை வரலாற்றில் 1995 ஆம் ஆண்டு யாழ். குடாநாட்டு மக்களின் இடப்பெயர்வு வரலாற்றில் பதிவாகிய மிகப்பெரும் சம்பவமாகும். அதன்பின்னர் தற்போது மடுமாதா இடம்பெயர்ந்துள்ளதும் ஒரு வரலாற்று அவலமாகும்.

தமிழ் மக்கள் தொடர்ச்சியாக சந்தித்து வரும் அவலங்களில் இது மிகவும் துன்பமானது. எனினும் வரலாற்று சிறப்புமிக்க இந்த புனித இடங்களை நோக்கிய படை நடவடிக்கையை எந்த ஒரு நாடும் கருத்தில் எடுக்காத்து மிகவும் வேதனையானது.

களமுனையைப் பொறுத்தவரையிலும் மிகவும் உக்கிர மோதல்கள் நடைபெற்று வருகின்றன. படைத்தரப்பின் இழப்புக்கள் தொடர்பாக அரசு தகவல்களை வெளியிடாத போதும், படையினர் கணிசமான இழப்புக்களை சந்தித்து வருவதாக விடுதலைப் புலிகளும் சுயாதீன தகவல்களும் தெரி வித்து வருகின்றன. அதேநேரம் இராணு வத்தினர் ஓய்வின்றி நடவடிக்கையில் ஈடு படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படு கிறது.

களமுனையின் தீவிரத்தை உணர்ந்து கொள்ள தீர்ந்து போகும் எறிகணைகளும் மேற்படி விடயங்களும் ஒரு சில உதாரணங்கள்.

களையும் பயன்படுத்தி வருகின்றனர். மடுத் தேவாலயத்தில் இருந்து எறத்தாள 1500 மீற்றர் தூரத்தில் சமர் இடம்பெற்று வருவது, விடுதலைப்புலிகள் படையினரை மடுவிற்குள் உள்வாங்கி ஒரு படைப்பரம்பலை எற்படுத்த எண்ணி வருவதையே காட்டுகின்றது.

அதாவது 57 மற்றும் 58 என இரு டிவிசன்களை சேர்ந்த ஏறத்தாள 15,000 இராணுவத்தினருடன் நகரும் இராணுவத்தின் செறிவாக்கத்தை குறைக்கும் உத்திகளை விடுதலைப்புலிகள் மேற்கொள்ளத் தயாராகி வருகின்றனர். எனினும் பெரும் எதிர்ச்சமர், அதிக இழப்புக்கள், கடுமையான மன அழுத்தங்களுக்கு மத்தியில் பரவலடையும் படையினர் எதிர்காலத்தில் தம்மால் கைப்பறறப்பட்ட இடங்களை தக்கவைப்பதற்குரிய மன நிலையை கொண்டிருப்பார்களா என்பதற்கான பதிலை காலம் விரைவில் உணர்த்திவிடும்.

1997 களில் நடைபெற்ற வெற்றி உறுதி நடவடிக்கையில் ஏற்பட்ட படை பரம்பலை போன்றதொரு படை பரம்பலையே தாம் எதிர்பார்த்து காத்திருப்பதாக விடுதலைப் புலிகளின் சிறப்பு படையணிகளில் ஒன்றான சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவின் துணைத் தளபதி அமுதாப் அண்மையில் தெரிவித்திருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டின் இறுதிப்பகுதியில் முல்லைத்தீவில் நடைபெற்ற வான் தாக்குதலில் அமுதாப் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு தரப்பு பலதடவைகள் தெரிவித்திருந்த நிலையில் அமுதாப் வழங்கிய உரை முக்கியமானது.

இலங்கையின் பொருளாதாரம் அதாள

## பாதுகாப்புஆய்வு
## வேல்ஸிலிருந்து அருஷ்

பாதாளத்தை நோக்கிச் செல்வதாக உலகின் பல முன்னனி பல அமைப்புக்கள் தெரிவித்து வருவதுடன், இலங்கை வறிய நாடாக மாற்றம் பெற்று வருவதாகவும் ஆசிய பசுபிக் பொருளாதார சமூக அமைப்பும் அண்மையில் தெரிவித்திருந்தது.

மேலும் 2008 இற்கான எதிர்பார்த்த பொருளாதார வளர்ச்சியை இலங்கை அடையமுடியாது என ஆசிய அபிவிருத்தி வங்கியும் தெரிவித்துள்ளது. இந்த நிலையில் அரசு வன்னி கள முனையில் தனது படை நடவடிக்கைகளை எத்தனை காலம் தக்க வைக்கப் போகின்றது என்பது தொடர்பாகவும் பலத்த சர்ச்சைகள் எழுந்துள்ளன.

எனினும் களமுனை களையும், பொருளாதரத்தையும் தக்கவைப்பதற்கான கடுமையான முயற்சிகளை இலங்கை அரசு தொடர்ந்து மேற்கொண்டே வருகின்றது.

மிகவும் அதிக படை வலுவையும், சூட்டாதரவையும் உள்வாங்கிவரும் வன்னி களமுனையை நீண்டகாலம் படையினர் தக்கவைக்க முடியுமா என்பதை படைத்தரப்பு மீண்டும் ஒருமுறை தெளிவாக உணர்ந்து கொள்ள அதிக காலம் எடுக்கப்போவ தில்லை.

நன்றி வீரகேசரி வார ஏடு

# எண் சோதிடம்



## எண் -8 (சனி)

**மனதின் தன்மை :** இவ்வாதிக்கரில் மேன்மையானவர்களை கருணை, இரக்கம், பச்சாதாபம், பிறர் கஷ்டம் கஷ்டம் கண்டு சகியாமை, சமூகத்தின் அநீதிகளை எதிர்த்துப் போராடுதல், பயமின்றித் தீமைகளைக் கண்டித்தல், வேதாந்த சாஸ்திரங்களில் பற்றுதல், கலைகளில் ஆழ்ந்த ஞானம் முதலியவைகளால் நிறைந்த சீர்திருத்தவாதியாக இருப்பதன் மூலம் அறியலாம். மிகச் சிலரே இப்படிப்பட்டவர்கள். இதற்கு அடுத்த படியாக மிகக் கௌரவமாகத் தோன்றுபவர்களைக் காணலாம். இவர்கள் மேன்மையெல்லாம் வெளித் தோற்றமே. உள்ளத்தின் கண் பேராசையும், சுயநலமும், போகங்களில் சதா அதிகரிக்கும் இச்சையும் கொழுந்து விட்டெரியும். சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியிருப்பர்.

இந்த ஆதிக்கரில் பெரும்பாலானோர் (மிக உயர்ந்த நிலையில் உள்ளவர்கள் கூட) என்னிடம் தமக்குக் கவலைக்கிடமான தீய எண்ணங்கள் அடிக்கடி எழுவதாகக் கூறியிருக்கின்றனர். இவர்கள் மனதை திருட்டு விபசாரம்,பெருத்த மோசடிகள்,கொள்ளை, கொலை, கள்ளக் கையெழுத்திடல்,கள்ள நோட்டு அடித்தல் முதலிய காரியங்கள் வெகுவாகக் கவர்கின்றன. ஆனால் மேலே குறிப்பிட்டவர்கள் இக் காரியங்களை மிகவும் விரும்புகின்றவர்களேயன்றி துணிந்து ஈடுபடக் கூடியவர்களல்லர். (பெர்னாட்ஷா 26ஆம் திகதி பிறந்தவர். தம் உள்ளக் கிடக்கையை வெளியிடும்போது கூறுகிறார். "நான் மற்ற தொழில்கள் புரிவதை விட கொள்ளைக்காரனாக இருப்பதையே பெரிதும் விரும்பினேன்")

இனி இவ்வாதிக்கரில் கீழ்த்தரமானவர்களைக் கவனிக்கலாம். அவர்களில் பெரும்பாலானோர் சிறைச்சாலைகளை நிரப்புகின்றனர். மேற்குறித்த தீய எண்ணங்களில் ஊன்றி அதையே வாழ்க்கையாகக் கொண்ட இவர்களை விதிவசப்பட்வர்களாதலால் குற்றம் புரிந்து தப்புவதில்லை ; தண்டனையையே அடைகின்றனர்.

### பொதுவான குணாதிசயங்கள்

இவர்கள் அளவுக்கு மிஞ்சின மனோ சக்திகளும் தெளிந்த அறிவும், மிகக் கூர்மையான புத்தியும் உடையவர்கள் சதா யோசனைகளில் ஆழ்ந்திருப்பர். மிகப் பெரிய பிரச்சினைகளால் மனம் கவரப்படும். மனதில் உற்சாகம் இராது. எப்பொழுதும் எதையோ பறிகொடுத்தவர் போலவே காணப்படுவர். சுகங்களையும் மனதார அனுபவிக்கமாட்டார்கள்.(இந்த ஆதிக்கரில் பெருத்த அயோக்கியர்கள் எப்பொழுதும் சிரித்த வண்ணமிருப்பதுண்டு. சுகங்களை எவ்வளவு அனுபவித்தாலும் இவர்களுக்கு அவைகளால் திருப்தி உண்டாகாது. இவர்களுக்கு தன்னம்பிக்கை மிகக் குறைவு. வாழ்க்கையில் வெற்றி ஏற்பட்ட பின்னர் தான் இவருக்குத் தைரியமுண்டாகும். பிறரையும் எளிதில் நம்பமாட்டார்கள். பிறருடன் பழகுவதில் மிக ஜாக்கிரதையாக இருப்பார்கள். மன் சதா ஏகாந்தத்தையே விரும்பும். பகுத்தறிவு மிகுந்த இவர்கள் ஏதிலும் நிதானத்தையே கடைப்பிடிப்பார்கள். பணத்தைச் செலவழிப்பதில் கஞ்சத்தனம் வெளிப்படும். வாழ்க்கைக்கு உபயோகப்படக் கூடிய எல்லா சாஸ்திரங்களையும் நன்கு ஆராய விரும்புவர். எப்பொழுதும் தம்மை உலகிலேயே ஒரு தனி மனிதராகவே கருதியிருப்பார்கள். இது அவர்களது பேச்சிலும் நடத்தையிலும் நன்கு புலப்படும்.

இவர்களுக்கு மிகச் சில நண்பர்களே ஆயுட்காலத்தில் ஏற்படுவார்கள். அவர்களாலும் இவர்கட்கு நீடித்து நன்மை ஏற்படாது. பயங்கொள்ளியானதால் (2 ஆதிக்கருக்கு அடுத்தபடியாக இவரே சந்தேகத்திலும் பயத்திலும்) வாழப் பயந்து தற்கொலை மூலம் சாவை அணைக்கவும் முடிவு செய்யக் கூடியவர்கள்.தற்கொலைக்குக் கூட சிரமந் தராத விஷத்தை நாடுவர் ஆபத்து சூழ்ந்தபோது.

**விதி:** இவர்களில் பலர் மிகச் சிறு வயதிலேயே ஆதரவளிக்க வேண்டிய தாய் தந்தையரை இழந்து கல்வி கற்கவும் சிரமப் படுகின்றனர். இளமைப்பருவம் இன்னல்கள் நிறைந்ததாக இருக்கும், மிக மிகச் சிரமப்பட்டே சிலர் வாழ்க்கையில் முன்னேறுகின்றனர். இவர்களுக்கு ஒவ்வொரு சிறு சுகமும், வெற்றியும் கூட பெருத்த போராட்டத்திற்குப் பின்னரே கிடைக்கும். இவர்களது யோக்கியதைக்குத் தகுந்த சமூக அந்தஸ்தை அடைய இவர்கள் பெரும் போராட்டம் நடத்தியே தீர வேண்டும்.

பலர் சிறு வயதிலேயே கர்ம ரோகங்களால் பீடிக்கப்படுவதுண்டு. இவர்களுக்கு வாழ்க்கையில் ஏதாவது இடையூறுகள் தோன்றிக் கொண்டே இருக்கும். 8ஐக் குறிக்கிற வயதுகளான 8,17,26,35,44 வயதுகள் நடக்கும் போது மிக்க ஜாக்கிரதையாக இராவிடில் பெருத்த அபாயங்கள் நேரும்.

(பெயர் எண்8 வருபவர்களுக்கும் 8 ஐக் குறிக்கும் வயதுகளில் முக்கிய சம்பவங்களும் நிகழும்). இவர்களில் ஒரு சாரார் கஷ்டத்துடன் நீண்ட நாட்கள் வாழ்வர்; மற்றொரு சாரார் நன்கு வாழும்போதே திடீரென் விபத்துக்குள்ளாகி மடிவர். (தினசரிப் பத்திரிகைகள் வாசிக்கும்நேயர்கள் மரம் விழுந்து மாண்டார், இடி விழுந்து இறந்தார், கார் ஏறி காலமானார், தீக்கிரையானார் முதலிய செய்திகள் வரும்போது, பெயர், வயது,திகதியை கவனித்தால் இவ்வுண்மை புலப்படும்). பிறர் புரியும் குற்றத்திற்குக் கூட இவர்கள் அடிக்கடி ஜவாப்தாரியாகக் கருதப்படுவதுண்டு. மிக்க நல்லவர்களாகவும்,மேன்மையானவர்களாகவும் மேதாவியாகவும் இருந்தாலும் இவர்களை அருகில் இருப்போர் சரியாகப் புரிந்துகொள்வதில்லை.

## பண்டிட் ஸேதுராமன்

இவர்கள் ஒருநாளும் பிறர் உதவியை எதிர்பார்க்க வேண்டாம். சுய முயற்சியால் மேன்மையடைய வேண்டும்.

இவர்கள் மற்றவர்களை விட பகுத்தறிவும் அதிகம் உடையவர்களாக இருப்பதால் இவர்களுக்கு மற்றவர்களுடன் சேர இயலாது. அதனாலேயே இவர்கள் தனி மனிதர்களாக நண்பர்கள் அதிகமின்றி வாழ்கின்றனர்.

(1,4,8 எண்ணில் பிறந்தவர்கள் அருகிலிருந்தால் உடனே இவர்கள் அவர்களை மனமொத்த நண்பர்களாக்கிக் கொள்வர். இந்த 1,4,8 எண்களாலே மாத்திரம் தான் இவர்களுக்கு சுகமுண்டாகும். மற்ற எண்களில் பிறந்தோர் தொடர்பு பயனற்றதாகிவிடும்.)

### சரீரம்-நோய்- மருந்து

**சரீரம்:** இந்த ஆதிக்கரை லக்ஷணங்களைக் கொண்டு அறியும் போது நேயர்கள் குழம்பிப் போகக்கூடும். ஏனெனில் பிறந்த திகதி 8 ஆகூ இருந்து கூட்டு எண்ணும் 8ஆக இருந்தாலும், சனியினுடைய காலமாகிய ஜனவரி,பெப்ரவரி மாதங்களில் பிறந்திருந்தால் தான் சரீரம் சனியின் ஆதிக்கத்தைப் பிரதிபலிக்கும். இல்லாவிடில் அந்த மாதத்திற்கான கிரகத்தின் தோற்றம் ஓரளவு கலந்திருக்கும். ஏனெனில் சனியின் ஆதிக்கம் யதார்த்தமாக வெளிப்பார்வைக்குப் புலப்படக்கூடியதல்ல. பிறந்த திகதி 8 ஆக இருந்து கூட்டு எண் 5 ஆக இருந்தால் வசீகரமானவராகவும் அழகு மிக்கவராகவும் தோன்றுவர். உடலில் நோய் உள்ளவரென்பது முகத்தில் புலப்படாது. சிலசமயங்களில் சனி ஆதிக்கரில்பூரணமான அழகுள்ளவர்களைக் காணநேரும். ஆனால் அவர்களது அழகின் ஆழ்ந்த தன்மை(ஸீதா தேவியாரின் அழகைப் போல்) துரதிர்ஷ்டத்தையே ஊர்ஜிதப்படுத்துவதாகும். இனி அவர்களது இயல்பான உருவ அமைப்பைக் கவனிப்போம் .(ஆதிக்க பலம் குறைவானால் உருவ அமைப்புமாறுபட்டிருக்குமென்பதை வாசகர்கள் நினைவில் கொள்ளவும். (தொடரும்)

---

## முதல் காலாண்டுக்கு 39 திட்டங்களுக்கு யாழ்.மாவட்ட மீளாய்வுக்குழு அனுமதி

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஐக்கிய நாடுகள் மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்களினால் 2008 ஆம் ஆண்டின் முதற் காலாண்டு காலப் பகுதியில் செயற்படுத் துவதற்காக மொத்தம் 39 செயற்திட்டங்களுக்கு 27 கோடியே 70 இலட்சத்து 9 ஆயிரத்து 313 ரூபா 20 சதம், மாவட்ட மீளாய்வுக் குழுவினால் அனுமதிக்கப்பட்டுள்ளதாக யாழ்.அரசாங்க அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.(ஓ)

## பாராட்டு விழா

கொக்குவில் மத்தி மேற்கு J/128 கிராம உத்தியோகத்தர் மு.விஜயரட்ணத்தின் பதவி உயர்வு பாராட்டும், பிரியாவிடை விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு ஞானபண்டித வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழா்வில் ஆசியுரையை கொக்குவில் மஞ்சவனப்பதி, சிவஸ்ரீ வை.சுப்பிரமணியக் குருக்கள் வழங்கவுள்ளார். பாராட்டுரையை நல்லூர் பிரதேச செயலக, நிர்வாக உத்தியோகத்தர் பி.அமிர்தகௌரி மோகன், நல்லூர் பிரதேச செயலக திட்டமிடல் உதவிப் பிரதேச செயலர் எஸ்.இரவீந்திரசர்மா,ஞானபண்டித வித்தியாசாலை அதிபர்க.பரமேஸ்வரன், இளைப்பாறிய அதிபர் மு.திருஞானசம்பந்த பிள்ளை, மகாஜனாக் கல்லூரி இளைப்பாறிய உபஅதிபர் இராசகுலேந்திரன் ஆகியோர் வழங்கவுள்ளனர். (அ-7)

## மஹோற்சவம்

புங்குடுதீவு, கண்ணகைபுரம், அருள்மிகு கண்ணகை அம்மன் என வழங்கும் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி,22 ஆம்திகதி வைரவ மடையுடன் நிறைவுறும்.

இதில் இன்று காலை 7 மணிமுதல் கிரியைகள் நடைபெற்று 12 மணிக்கு கொடியேற்றமும்,18 ஆம்திகதி வெள்ளிக்கிழமை சப்பறத் திருவிழாவும், 19 ஆம் திகதி மு.ப 11 மணிக்கு இரதோற்சவமும், 20 ஆம் திகதி மு.ப 10 மணிக்கு சமுத்திரத் தீர்த்தமும் நடைபெறும். ஏனைய நாட்களில் தினமும் காலை 8 மணிமுதல் 12 மணிவரையும், மாலை 3மணி முதல் 5மணி வரையும், காலை,மாலை திருவிழாக்கள் இடம்பெறும். (ஓ)

# ஆரம்பக் கல்வி கற்பித்தல் உபகரணப் போட்டி

யாழ்ப்பாண கல்வி வலய, நல்லூர் கோட்ட மட்ட ஆரம்பக் கல்வி கற்பித்தல் உபகரணப் போட்டி 2008 யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி-குமாரசாமி மண்டபத்தின் கீழ் உள்ள வகுப்பறைகளில் 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகத்தினால் ஆரம்பித்து வைக்கப்படும்.

காட்சிப்படுத்தப்படும் ஆக்கங்களை 8 ஆம் திகதி காலை 7.30 மணிமுதல் 9.15 மணிக் குள் சுட்டெண்கள் தெரியக் கூடியதாக வகுப்பு ரீதியாக காட்சிப்படுத்த வேண்டும் என நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.வி. குணசேகரம் அறிவித்துள்ளார்.(ஓ)


யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்-இலங்கை

வெளிவாரிப்பட்டப்பதிவுகள் பரீட்சைகள் அலகு

## முக்கிய அறிவித்தல்

### வெளிவாரிப் பரீட்சைகள்-2007

1. வணிக முதற் தேர்வு -2006
2. வணிகமாணி பகுதி -I -2005 &2006
3. வணிகமாணி பகுதி - II-2004 &2005
4. வணிகமாணி பகுதி - III -2004

மேற்படி வெளிவாரிப் பரீட்சைகளில் வணிகமுதற் தேர்வு மற் றும் வணிகமாணி பகுதி -I ஆகிய பரீட்சைகளை மே மாத இறு திப் பகுதியிலும் , வணிகமாணி பகுதி-I வணிகமாணி பகுதி -III ஆகிய பரீட்சைகளை யூன் மாத முற்பகுதியிலும் நடாத்து வதற்கு ஒழுங்குகள் செய் யப்பட்டு வருகின்றன.

இம்முறை வெளி மாவட்ட மாணவர்களின் நன்மை கருதி வவுனியா வளாகத்திலும் மேற்படி பரீட்சைகளை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதால் , வவுனியா வளாகத்தில் மேற்படி பரீட்சை களுக்கு தோற்ற விரும்பும் பரீட்சார்த்திகள் உடனடியாக வெளி வாரிப் பட்டப் பதிவு கள் பரீட்சைகள் அலகுடன் தொடர்பு கொண்டு மாணவர் பெயர், பதி விலக்கம் , சுட்டிலக்கம் மற்றும் தோற்ற விருக் கும் பரீட்சையின் பெயர் ஆகிய விபரங்களை தெரிவிக்கும் படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேலதிக விபரங்களுக்கு 021-222 3612 என்ற தொலை பேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்
03.04.2008.

(சி/964)


## பாலர் பாடல்கள் நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் கிழக்கு சனசமூக நிலைய சிவன் முன்பள்ளியின் 2008 ஆம் ஆண்டு முன்பள்ளி பாடத்திட்டத்திற்கமைவான "பாலர் பாடல்கள்" நூல் வெளியீட்டு நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 2 மணிக்கு சுன்னாகம் கிழக்கு சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஓ)

## இராசிபலன்

06.04.2008
(பங்குனி24, ஞாயிற்றுக்கிழமை)
அமாவாசை முற்பகல் 09.53மணிவரை
ரேவதி முன்னிரவு 10.08 மணிவரை
இராகுகாலம் 04.38-06.08மணிவரை
சுபநேரம்-09.08-10.38 மணிவரை
வண்ணை காமாக்ஷியம்மை கொடி
மல்லாகம் பழம்பதி முருகன் கொடி

| | |
|---|---|
| மேடம் | காரிய அலைச்சல், கோபப்படுதல், சுப செலவு, சயன சுகக்குறைவு. |
| இடபம் | செய்தொழில் விருத்தி,குடும்ப மகிழ்ச்சி, காரீயஅனுகூலம், பெருமையடைதல். |
| மிதுனம் | சுபநிகழ்வு, கடின உழைப்பு, புதிய தகவல், முயற்சி கைகூடும். |
| கடகம் | உடல் உழைப்பு, ஆன்றோரால் மதிக்கப் படுதல், புதிய முயற்சி, திடீர் பயணம். |
| சிங்கம் | ஆரோக்கியக் குறைவு,வீண்தொல்லை, காரிய தடங்கல், போசனசுகம். |
| கன்னி | அபூர்வ சந்திப்பு,செல்வாக்கு,காரிய சித்தி, பொருள்சேர்க்கை. |
| துலாம் | பணவருவாய், சுவாரஸ்யம், முயற்சி கைகூடும், பயணம். |
| விருச்சிகம் | வியாபார விருத்தி, மரியாதைக் குறைவு, முயற்சி தாமதம்,பணவிரயம். |
| தனுசு | கல்வியில் ஆர்வம், மனச் சஞ்சலம், ரோக நிலை, முயற்சிதாமதம். |
| மகரம் | கூட்டுமுயற்சி, சகோதரர்கள் வழி நன்மை, விருந்துபசாரம், அந்நியர் சந்திப்பு. |
| கும்பம் | வேலைச்சுமை, முயற்சி தாமதம், உடல் நலக் குறைவு, பணவிரயம். |
| மீனம் | தெய்வசிந்தை, புதிய முயற்சி, உறவினர் சந்திப்பு, ஜனவசியம். |

வளவன்

# புக்காரஸ்ட் மாநாடு சுமுகமாக நடந்ததாக ரஷ்ய அதிபர் புட்டின் தெரிவிப்பு



ருமேனிய தலைநகரான புக்காரஸ்டில் நடந்த நேட்டோ தலைவர்களின் பேச்சுவார்த்தைகள் ஆக்கபூர்வமாக இருந்ததாக பதவி விலகிச் செல்லும் ரஷ்ய அதிபர் விளாடி மீர் புட்டின் கூறியுள்ளார்.

பனிப்போர் காலகட்ட பதற்ற நிலைக்கு திரும்புவது எவருக்கும் பலன் தராது என்றும் அவர் வாதிட்டுள்ளார்.

எப்படியிருந்தபோதிலும் உக்ரைன் மற்றும் ஜோர்ஜியாவை உள்ளடக்கிய நேட்டோவின் எந்த விதமான கிழக்கு நோக்கிய விரிவாக்கலும் நேரடி அச்சுறுத்தலாகப் பார்க்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

மீண்டும் மீண்டும் வழங்கப்படும் உறுதிமொழிகள் அதற்குப் போ தாது என்று கூறிய புட்டின் தேசிய பாது காப்பு கொள் கைகள் வெறு மனே உறுதிமொழிகளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படமுடியாது என்றும் தெரிவித்தார்.

அமெரிக்காவின் ஐரோப்பாவுக்கான உத்தேச ஏவுகணைப் பாதுகாப்புத்திட்டம் நம்பிக்கையை வளர்க்காது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-5)

# எதிர்காலம் குறித்து முடிவெடுக்க கட்சி உறுப்பினர்களுடன் முகாபே சந்திப்பு



சிம்பாப்வேயில் சனிக்கிழமையன்று நடைபெற்ற அதிபர் தேர்தலுக்கு பிறகு எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பது குறித்து முடிவெடுக்க தனது கட்சியின் மூத்த உறுப்பினர்களை அதிபர் றொபர்ட் முகாபே சந்தித்துள்ளார். இந்தத் தேர்தலின் முடிவுகள் இன்னமும் வெளியிடப்படவில்லை.

இத்தேர்தலில் யாரும் தெளிவாக வெற்றி பெறவில்லை என்று தேர்தல் ஆணையம் அறிவிக்கும் பட்சத்தில் மறு தேர்தலில் முகாபே மீண்டும் போட்டியிடுவதை ஆளும் ஜானு பி.எப் கட்சி ஆமோதித்துள்ளதாக சிம்பாப்வேயின் பாதுகாப்பு அமைச்சர் டிடிமஸ் முடாசா தெரிவித்தார்.

இந்தத் தேர்தலில் தாம் வெற்றிபெற்று விட்டதாக நம்பும் எதிர்க்கட்சியான ஜனநாயக மாற்றத்துக்கான இயக்கம் தேர்தல் ஆணையம் தேர்தல் முடிவுகளை விரைவாக வெளியிடவேண்டும் என்று கோரி ஒரு அவசர மனுவை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது.

ஆனால் தேர்தல் முடிவுகளில் யாருக்கும் வெற்றி கிடைக்கவில்லை என்று முடாசா முன்பு தெரிவித்திருந்தார். (அ-5)

# இராணுவத்தினரின் துப்பாக்கிச்சூட்டில் புத்த பிக்கு உட்பட 8 பேர் பலி

(பிஜீங்)

திபெத்தை தன் மாகாண பகுதிகளில் ஒன்றாக மாற்ற சீனா பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.

சீனாவுக்கு எதிராக திபெத் நாட்டுக்காரர்கள் போராட்டம் நடத்தி வருகிறார்கள். அவர்களை சீன இராணுவம் அடக்கியபடி உள்ளது. கடந்த மாதம்14ஆம் திகதி திபெத்தில் உள்ள லாசா பகுதியில் வெடித்த பயங்கர கலவரத்தில் 15 பேர் பலியானார்கள்.

இதற்கு உலகின் பல நாடுகள் சீனாவை கண்டித்தன. இதையடுத்து பிஜீங்கில் நடக்க இருக்கும் ஒலிம்பிக் போட்டிகளை சீர்குலைக்க திபெத் புத்த பிக்குகள் கலவரத்தை தூண்டி விடுவதாக சீனா கூறியது.

இந்த நிலையில் திபெத்தில் உள்ள டோன் கோர் எனும் நகரில் போராட்டம் நடந்தது. அது கலவரமாக மாறியது.

அப்போது சீன இராணுவம் சரமாரியாக துப்பாக்கி சூடு நடத்தியது.

இதில் 8பேர் குண்டு பாய்ந்து பலியானதாக தெரியவந்துள்ளது. ஆனால் இதை சீன பொலிஸார் மறுத்துள்ளனர்.

உலக தரிசனம்

துப்பாக்கி சூட்டில் பலியானவர்களில் 3 பேர் பெண்கள் என்றும் ஒருவர் புத்தபிக்கு என்றும் தெரியவந்துள்ளது. (ஓ-5)

# கிளிண்டனின் சொத்து மதிப்பு ரூ.1000 கோடியை தாண்டியது

(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி பதவிக்கு போட்டியிட ஜனநாயக கட்சி சார்பில் நிற்க கிளிண்டனின் மனைவி ஹலாரி ஆதரவு திரட்டி வருகிறார். நேற்று முன்தினம் அவர் தன் வருமானம் பற்றிய விபரங்களையும் வரி கட்டிய விபரங்களையும் வெளியிட்டார். தன் கணவரும் முன்னாள் ஜனாதிபதியுமான பில் கிளிண்டன் சொத்து மதிப்பு குறித்தும் தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் கடந்த 8 ஆண்டுகளில் கிளிண்டனின் சொத்து பல மடங்கு அதி கரித்து இருப்பது தெரியவந்துள்ளது. ஜனாதிபதி பதவியில் இருந்த கிளிண்டன் பல்வேறு நாடுகளுக்கு சென்று சொற்பொழிவாற்றி வருகிறார். இதில் அவருக்கு கணிசமான வருமானம் கிடைக்கிறது.

கிளிண்டன் 'மைலைப்' மற்றும் 'கிவ்விங்' என 2 புத்தகங்களை எழுதி உள்ளார். இவற்றின் மூலம் மட்டும் 700 கோடி ரூபாய் அவருக்கு கிடைத்துள்ளது. அவரது மொத்த சொத்து மதிப்பு 1000 கோடி ரூபாயை தாண்டியுள்ளது.

கடைசியாக 2000ஆம் ஆண்டில் கிளிண்டன் தன் சொத்துக் கணக்கை அதிகார பூர்வமாக வெளியிட்டிருந்தார். அப்போது கிளிண்டனுக்கு இருந்த வருமானத்தை விட தற்போது கூடுதலாக பல வழிகளில் வருமானம் வருகிறது. (அ-5)

# பதவி உயர்வு வாழ்த்தும் பிரியாவிடை விழாவும்

## மக்களுக்காக உழைத்த மகா புருடர்

தற்போதுள்ள சூழ்நிலையில் யாழ்.குடாநாட்டில் கிராம அலுவலர் பதவி என்பது மிகவும் சிரமமானதும் சிக்கல் நிறைந்ததுமாகும். இந்தச் சூழ் நிலையிலும் எமது பிரிவு கிராம உத்தியோகத்தர் திரு விஜயரட்ணம் தனது பதவியைத் திறப்பட, கடமை தவறாது, நேரம் பாராது செய்து தற்போது பதவி உயர்வு பெற்று மாற்றலாகிச் செல்லவிருப்பது எங்களுக்கு மிகவும் கவலையைத் தருவதாக உள்ளது. பதவி உயர்வு பெற்று செல்லும் அவர் மேலும் அப் பதவியில் தனது கடமைகளைத் திறம்படச் செய்து மேலும் மேலும் பதவி உயர்வுகள் பெறுவார் என்பது திண்ணம், எங்கள் பிரிவில் அவர் ஓர் உதாரண புருடராக கடமையாற்றி வந்தார் என்பதை அவரது பாராட்டுப் பிரிவு விழாவிற்கு அன்பளிப்புகள் பெறச்சென்ற போது மக்கள் எங்களுக்குத் தெரிவித்த அபிப்பிராயங்கள் மூலம் அறிந்து கொண்டோம். அவர் ஒரு கிராம உத்தியோகத்தராக எங்களுடன் பழகவில்லை. குடும்ப உறவினர் போலவே இருந்து தன் கடமைகளைச் செய்துள்ளார். அவர் மேலும் மேலும் பதவி உயர்வுகள் பெற்றுச் சீருடனும் சிறப்புடன் குடும்பத்தாரோடு வாழ எல்லாம் வல்ல இறைவனை எங்கள் விழா அமைப்பாளர் சார்பாகவும் எங்கள் கிராம மக்கள் சார்பாகவும் வேண்டுகிறோம்.

பாராட்டு விழாக் குழுவினர்.

## பல் வளம் பெற்று பல்லாண்டு வாழ்க!

மக்களை அணுகி அணுகிச் சேவை செய்தாய்! கவலை துடைத்தாய்! முத்தான விஜயரட்ணமே வாழ்க நீ நீடூழி!

கலைமகளும் அலைமகளும் மலைமகளும் கலைநடம் செய்யும் உலக மகாசக்தியாம் மஞ்சவனப்பதி முருகன் மஞ்சலடி வேலன் மகிழ்வுடனே வீற்றிருக்கும் பெருமைசேர் கொக்குவிலில் மஞ்சுபுகழ் மரபுதித்த எங்கள் கிராமமதனில் கிராம சேவகராக J/128ஆம் பிரிவுதனில் முத்தாய் விளங்கிய விஜயரட்ணம். 2004ஆம் ஆண்டு முதல் பல கிராமங்களில் மகத்தான சேவையாற்றி பாரெலாம் செய்த சேவைகளினால் "பண்பின் சிகரம்" என்ற பரிசை அணிகலமாகப் பெற்றாய்!

நாலாண்டு காலம் நற்சேவை புரிந்து தேடிவரும் மக்களை புன்னகையுடன் வரவேற்று கனிவுடன் பேசி களிப்புறச் செய்து தேவைகளை செய்து வந்த தங்களுக்கு பிரியா விடை தர எங்களுக்கு மனம் இல்லை!

இருப்பினும் மக்கள் அன்புடன் நல்கும் பிரியா விடையை ஏற்று மேலும் மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்று வாழ்க! வாழ்க! பல்லாண்டு வாழ்க!

சிவஸ்ரீ வை. சுப்பிரமணியக் குருக்கள்

ஆலய பிரதம குரு ,மஞ்சவனப்பதி , கொக்குவில்.



## முத்தையா விஜயரட்ணம்

கிராம அலுவலர்

சொந்த இடம்:- சுருவில் , ஊர்காவற்றுறை.

பிறந்ததிகதி:- 09.02.1957

முதல்நியமனம்:- 01.01.1982 -பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் J/59 சுருவில் , J/60 புளியங்கூடல் கிராம அலுவலர் பிரிவுகள்

01.03.1989 கிராம அலுவலர் J/60 புளியங் கூடல்

பதில் கடமை :-13. 06. 1989 -13.09.1993- ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை, J/39 எழுவைதீவு.

01.01.1996:- கிராம அலுவலர் -முதலாம் தரம்

20.09.2004 :-06.04.2008 வரை J/128 கொக்குவில் மத்தி -மேற்கு.

10.11.2005 :-30.12. 2006 - V/219 மருதமடு வவுனியா பிரதேச செயலகம்.

29.01.2006:- கிராம அலுவலர் பதவிக்கான அதியுயர் சிறப்புத்தரம்.

01.-01.2007:- மீண்டும் J /60 புளியங் கூடல் பதில்கடமை J/59 சுருவில்

06.04.2008 :- வவுனியா பிரதேச செயலக கிராம அலுவலர். அதியுயர் சிறப்புத் தர கிராம அலுவல ராக நியமனம்.

## கண்ணியமும் கடமையுணர்வும் மிக்கோன்!

கொக்குவில் மத்தி-மேற்கு J/128 பிரிவு கிராம சேவையாளராகக் கடமையாற்றி பதவிஉயர்வுடன் மாற்றலாகிச் செல்லும் திருவாளர் எம்.விஜயரட்ணம் மனிதநேயம் மிக்க ஓர் அரச ஊழியர் ஆவார். மக்களுக்குப் பணியாற்றுவதற்காகவேயுள்ள அரச சேவையில் அமர்வோர் தங்களை எஜமானர்களாக எண்ணாமல் அம் மக்களின் வரிப்பணத்திலேயே தங்களின் ஊதியம் தரப்படுகிறதென்பதை உணர்ந்து மக்களுக்கு பாகுபாடின்றிச் சேவையை வழங்கக் கடமைப் பட்டவர்களாவர். திருவாளர் எம்.விஜயரட்ணம் இப்பிரிவுக்கு கிராம சேவையாளராகப் பொறுப்பேற்ற நாள் தொடக்கம் மக்கள் சேவையே தம் கடன் என்றுணர்ந்து செயற்பட்டவராவார்.

தம் பிரிவுக்குட்பட்ட மக்களின் எத்தகைய சேவைகளாயினும் தம்மால் செய்யக்கூடியவற்றைத் தவறாது அம் மக்களின் அபிலாஷைகளைத் திருப்தி செய்யக்கூடிய வகையில் சட்டதிட்டங்களுக்கமைய நிறைவு செய்து கொடுத்துக் கிராம மக்களின் அன்பையும் நன்மதிப்பையும் தேட்டமாக்கிக் கொண்டுள்ளார்.

எத்தகைய பிரச்சினைகளையும் தமது அணுகுமுறையினாலும் ஆலோசனை வழங்கும் வகையினாலும் சம்பந்தப்பட்டவர்களின் மனம் கோணாது தமது கடமைக் கூறுகளை மெச்சத்தக்கவகையில் ஆற்றியுள்ளார். இவருடைய பண்பான நடத்தையும் அன்பான உரையாடல்களும் அதேசமயம் கண்டிப்பான கடமை உணர்வும் மக்கள் மனத்தில் என்றும் நிலை பெற்றிருக்கும். "வெள்ளத்தனைய மலர் நீட்டம் மாந்தர்தம் உள்ளத்தனையது உயர்வு" என்ற வள்ளுவன் வாக்கிற்கமைவாக இவரின் உள்ளத்துயர்வு போல் இவரின் துணைவியாரும் பிள்ளைகளும் உயர்நிலையில் வாழ்வில் தடம் பதித்துக்கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. இவரின் பணியும் வாழ்வும் மேன்மேலும் சிறப்புற்றோங்க எல்லாம் வல்ல மஞ்சவனப்பதி முருகன் அருள்புரிவானாக!

சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை

ஓய்வு நிலை அதிபர், கொக்குவில்.

## உதவித்திட்டப்பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

கொக்குவில் மத்தி-மேற்கு கிராம அலுவலரான எம்.விஜயரட்ணம் அவர்கள் முன்னுதாரணமாகச் செயற்பட்டு கிராம சேவையாளர் அதி சிறப்புத் தரத்துக்கு பதவியுயர்வு பெற்றுச் செல்வதை அறிந்ததும் மிக்க மகிழ்ச்சியடைந்தேன். அனைவரையும் அரவணைத்துப் பண்புடன் பணியாற்றும் ஓர் நற்சேவையாளரான அவர் துரிதமாகவும் விசுவாசமாகவும் கடமையாற்றுபவர். தன்னிடம் வரும் கிராம மக்களின் தேவையறிந்து தாமதப்படுத்தாது வழிநடத்தும் இயல்பினைப் பல தடவைகள் பார்த்து வியப்படைந்திருக்கிறேன். அப்படிப்பட்ட கிராம அலுவலரான விஜயரட்ணம் எதிர்காலத்தில் மேலும் பலரும் போற்றும் வண்ணம் மக்கள் சேவையாற்ற எல்லாம் வல்ல இறைவன் துணை புரியவேண்டுமெனப் பிரார்த்தித்து வாழ்த்துக்கூறுவதில் பெருமையடைகின்றேன்.!

சி.இரவீந்திர சர்மா

உதவித்திட்டப் பணிப்பாளர்,

பிரதேச செயலகம், நல்லூர்.

# தன் வாழ்வை யோகத்திற்கே அர்ப்பணித்த சுவாமி ஸ்ரீ சிதானந்த சரஸ்வதி யோகி

இலங்கை வாழ் மக்களுக்கு யோகக் கலையைத் தன்னாலியன்றளவு அளித்து யோகத்திற்கே புத்துயிரும் புதுப்பொலிவும் கொடுத்த நம் குரு சுவாமி ஸ்ரீ சிதானந்த சரஸ்வதி யோகி; இன்று எம்மை விட்டுப் பிரிந்து இறைபதம் எய்திவிட்டார்.

யோகம் என்பது இலகுவில் 'ரியூசன்' எடுத்துப் படித்து முடிக்கும் கலையன்று. யோகம் என்றால் ஜீவாத்மா பரமாத்மாவுடன் ஒன்றிணையும் வழியைக் காட்டும் மார்க்கமாகும் தன் வாழ்வை யோகத்திற்கே அர்ப்பணித்து யோக வாழ்வை வாழ்ந்து பிறரையும் அவ்வழி நிற்க வைத்து ஆளாக்கியவர் சுவாமிகள் என்றால் மிகையாகாது.

### மட்டக்களப்பில் பிறப்பு

சுவாமி மட்டக்களப்பைச் சேர்ந்தவர். 1918 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 31ஆம் திகதி இளையதம்பி, பெரிய பிள்ளை என்னும் புண்ணியம் மிக்க அன்பும் அருளுமுடைய அன்னை தந்தையருக்கு அரும் மகவாக அவனியில் வந்துதித்தார். ஐந்தாம் ஆண்டு வரை கல்வி பயின்றார். பன்னிரண்டு வயது முதல் பதினைந்து வயது வரை ரெனிஸ் கிளப்பிலும்; பின்னர் பிரித்தானிய கடற்படையிலும் வேலை செய்தார்.

இக்கால கட்டத்தில் மல்யுத் தம், சிலம்படி, யோகம் போன்ற பயிற்சிகளைப் பெறுவதற்கு சில மலையாள நாட்டவர்கள் உதவினார்கள். இறைவன் சுவாமியைத் தடுத் தாட் கொள்ள விளைந்தார். சுவாமியின் முழந்தாள் முறிந்தது. சுவாமி ஆன்மீகப் பாதையைத் தெரிந்தெடுக்கும் வேளை வந்தது.

மலையாள நண்பர்களிடம் யோகம் பற்றிய நூல் ஒன்று இருப்பதை அறிந்து இரகசியமாக அதை எழுதியவரின் விலாசத்தைக் குறித்து வைத்தார். பெங்களூர் திருவாளர் சுந்தரத்துடன் தொடர்பு கொண்டு "ஆனந்த இரகசியம்" என்னும் நூலைப் பெற்றுக் கொண்டார். ஏகலைவன் துரோணரை மானசிகக் குருவாகக் கொண்டது போல சுவாமி அவர்கள் யோகி சுந்தரத்தை மானசிகக் குருவாக ஏற்றார். ஆசனங்களைப் பழகினார்.

ஒருமுறை தாம் பழகிய யோக ஆசனங்களை மலையாள நண்பர்களுக்குச் செய்து காட்டினார். மலையாள நண்பர்கள் சுவாமியின் முயற்சியை மெச்சி "ஜீவப் பிரமைமக்கிய வேதாந்த இரகசியம்" என்னும் நூலை பெறுவதற்கான முகவரியைக் கொடுத்தனர். அந் நூலில் குறிப்பிட்டவாறு சுவாமி பிராணாயாமத்தின் மேற்படிகளைப் பயின்றார். அவை அவருக்கு சித்தியாயின. ஆசனங்களைக் குறைத்துப் பிராணாயாமப் பயிற்சிகளைப் பயிலலானார்.

### இல்லறம்

சுவாமியின் வாழ்வில் பெற்றோர் தலையிட்டனர். இவன் சுவாமியாகி விடுவான் என்று பயந்து அவரைத் திருமண பந்தத்திற்குள் நுழைய வைத்தனர். சுவாமி ; மனைவி, பெண் குழந்தை, ஆண் குழந்தை என்ற வலைக்குள் இருபத்தைந்து வருடங்கள் சிக்கி இருந் தார்.

### துறவறம்

இந்தியா சுவாமியின் மனதை ஈர்த்தது. காசியில் முறைப்படி தீட்சை பெற்றார். முறைப்படி சந்நியாசம் பெற்றார். ஸ்ரீலஸ்ரீ பசுபதிலிங்க சுவாமிகள் சுவாமிக்குக் காவியுடை அணிவித்து உபதேசம் கொடுத்து அருளினார்.

### குருவின் கட்டளை

ஸ்ரீலஸ்ரீ பசுபதிலிங்க சுவாமிகள் சிதானந்த யோகியிடம் "சிதானந்தா நீ இலங்கை சென்று இந்த யோகத்தைப் பரப்பவேண்டும்" என்று கூற, சுவாமி இல்லறத்தைத் துறந்து இந்தியாவில் இருந்து மேலும் யோகம் கற்றுப் பேரின்பம் பெற விளைவதாகக் கூறினார்.

அதற்கு ஸ்ரீலஸ்ரீ பசுபதிலிங்க சுவாமிகள் "சிதானந்தா உனக்கு இப்பிறவியிலே அந்தப் பலன் கிடைக்காது. நீ இந்த யோகத்தை இலங்கை வாழ் மக்களிடையே பரப்பி அவர்களின் நோய் நொடிகளை போக்குவாயாக" எனப் பணித்தார். தனது குருநாதரின் ஆணையைத் தாம் இறைபதம் அடையும் வரை அயராது இலங்கையின் பல பாகங்களிலும் பரவ பணிசெய் தார் எம் சுவாமி.

### நல்லை ஆதீன முதல்வருடன் சந்திப்பு

ஆரம்பத்தில் மட்டக்களப்பில் உள்ள பாண்டிருப்பிலும் பின்னர், மாத்தளையிலும் யோக ஆசனங்களை சுவாமி பயிற்றுவித்தார். அவ்வேளை மாத்தளை முத்துமாரியம்மன் கோயிலுக்கு நல்லை ஆதீன முதல்வராக இருந்த ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் சமுகமளித்திருந்தார். அவர் சுவாமிகளின் திறமையை மெச்சி அவரை "யாழ்ப்பாணம் வந்து அங்குள்ள மக்களுக்கு யோகம் கற்பிக்க வேண்டும்" என வேண்டினார்.

**யோகம் என்றால் ஜீவாத்மா பரமாத்மாவுடன் ஒன்றிணையும் வழியைக்காட்டும் மார்க்கமாகும்**

### யாழ்.வருகை

"சுவாமியின் குருவருளும், யோகக் கலையும் எமக்குக் கிடைக்க வேண்டிய நன்நாள் வந்தது. நல்லைக் கந்தனுடைய உற்சவ காலத்தில் 1970 ஆம் ஆண்டு சுவாமி யாழ்ப்பாணத்திற்கு வந்தார். சுவாமிக்கு நல்லை ஆதீனம் பெரும் வரவேற்புக் கொடுத்தது. இருக்க இடமும் யோகம் பயிற்றுவிக்க வசதிகளும் செய்து கொடுத்தார்" ஸ்ரீ லஸ்ரீசுவாமி ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்.



சுவாமியின் யோகக் கலைக்கு யாழ். மண்ணில் பெரும் வரவேற்பு கிடைத்தது. ஆன்மீகத்தில், யோகத்தில் நாட்டமுடைய நல்லொழுக்க சீலர்கள் சுவாமி சிதானந்த சரஸ்வதி யோகியின் நன்மாணவர்களும், நண்பர்களும், நலன் விரும்பிகளும் ஆனார்கள். நிறுவன அதிபர்கள், தொழிலதிபர்கள், வைத்தியர்கள், சட்டத்தரணிகள் சுவாமியின் யோகக் கலையில் ஆர்வமுள்ளவர்களாகத் திகழ்ந்தனர். இளைஞர்கள், நோய்களால் பாதிப்புற்றவர்கள் ஆன்ம ஈடேற்றம் பெற விரும்பியவர்கள் யோகக்கலையைப் பயில ஆரம்பித்தனர்.

### யோகக் கலை நிபுணர்களின் உருவாக்கம்

சுவாமியிடம் அரும்பெரும் நற்குணங்கள் காணப்பட்டன. நேரந்தவறாமை, நேரக் கட்டுப்பாடு, கண்ணியமாக நடத்தல், சொல்வதைச் செயலில் காட்டும் பண்பு, மதித்தாரை மரியாதையோடு நடத்தும் பண்பு என்பன சுவாமியிடம் காணப்பட்ட பல்வேறு நல்பியல்புகளுள் சிலவாகும்.

காவியுடையும், கம்பீர நடையும், உரத்த ஆனால் அடக்கமான குரலும் மாணவர்களை ஈர்த்தது. மாணவரை மெச்சி, தட்டிக் கொடுத்து உற்சாகம் ஊட்டி, உபாயங்கள் பல கூறி ஆவன பல செய்து யோகக்கலையை மன முவந்து யாழ்.மக்களுக்கு அளித்தவர் எம் சுவாமி.

யாழ்ப்பாண மண்ணிலே பல இளம் யோகக் கலை நிபுணர்கள் உருவாகத் தொடங்கினார்கள். இன்றும் யோகத்தைப் பரப்பும் புகழ் மிக்கவர்கள் மட்டக்களப்பிலும், யாழ்ப்பாணத்திலும், திருகோணமலையிலும், வெளிநாடுகளிலும் சுவாமியின் சேவையை செய்து கொண்டிருக்கிறார்கள். இவர்களை உருவாக்கிய பெருமை சுவாமிக்கே உரித்தாகும்.

பாத்திரத்தின் கொள்ளளவிற்கே பதார்த்தம் இடலாம். யோக நாட்டம், குருபக்தி, சுய நலமின்மை, பொதுத் தொண்டு, சேவை, ஆன்ம நாட்டம் கொண்டவர்கள் சுவாமியிடம் யோக, பிராணாயாம, தியான, ஜெபப் பயிற்சிகளைப் பெற்றுக்கொண்டனர்.

### இமாலய சஞ்சாரம்

சுவாமியின் வாழ்வில் மேலும் ஒரு அற்புதம் நிகழும் சம்பவம் ஏற்பட்டது. யாழ்ப்பாணத்தில் சுவாமி பணியாற்றிய வேளையில் ஓர் அமெரிக்கப் பெண்மணி சுவாமியின் சிஷ்யையானார். அம் மாதின் உதவியுடன் சுவாமி இமாலயம் சென்றார். அங்கு தன் குருநாதர் ஸ்ரீலஸ்ரீ சிதானந்த சுவாமிகளைச் சந்தித்தார்.

### புதிய திருநாமம்

அங்கு தியானம் செய்து கொண்டிருந்த வேளை சுவாமி சிவானந்தருடைய உருவம் கண்ணிற்குப் புலனாகியது. அவ்வுருவிலிருந்து ஓர் ஒளிப்பிழம்பு தம்மை நோக்கி வருவதை சுவாமி கண்டார். இவ்வனுபவத்தை சுவாமி தன் குருநாதருக்கு எடுத்து உரைத்தார். "நீ பாக்கியசாலி" எனக் கூறிய குரு தன் சிஷ்யனுக்கு சந்தனமாலை, காவிவஸ்திரம் என்பவற்றை அணி வித்து "சிதானந்தா உனக்கு என்னுடைய பெயர் இருப் பதால் சிதானந்த யோகி என்னும் பெயருடன் 'சரஸ்வதி' என்னும் பெய ரையும் சூட்டுகிறேன் எனக் கூறினார். அன்றுமுதல் சிதானந்த சரஸ்வதியோகி" என சுவாமி அழைக்கப் பட்டார்.

### திவ்ய ஜீவன மண்டபத்தில்

1983 இல் சுவாமி யாழ்.மண்ணை விட்டு மட்டக்களப்பில் கல்முனை யில் யோகக் கலையை நிறுவ முற்பட்டார். அங்கு ஓர் ஆச்சிரமத்தை கட்டி னார். இலிங்க, அம்மன் வழிபாடு செய்தார்.

இருப்பினும் யாழ்ப்பாணம் மீண்டும் அவரை ஈர்த்தது. 1988இல் நல்லூர் திவ்ய ஜீவன மண்டபத்தில் ஆசனங்களை பயிற்றுவிக்க திவ்யஜீவன சத் சங்கத் தலைவர் வேண்டுகோள் விடுத்தார். அவ் வேண்டு கோளுக்கிணங்கி அங்கேயே தங்கி சுவாமி தம் பணியை ஆற்றலாயினார்.

யாழ்ப்பாணத்தில் சுவாமி செய்த யோக சேவை பொன்னால் பொறிக்கப்பட வேண்டியதாகும். உலகாயுதவாழ்வில் நாட்டங்கொண்ட இளைஞர்கள், யுவதிகள், வயது வந்தவர்களினுடைய வாழ்வின் மாற்றங்களுக்கும், திருப்பங்களுக்கும் சுவாமியே காரணமாக இருந்தார்.

மனதால், உடலால், எண்ணத்தால் சக்தியை விரயமாக்கி வாழ்நாளைக் குறைத்து நோயுற்று நலிவுற்று விளங்கியவர்களுக்கு யோக விழிப்புணர்வு கொடுத்த பெருந்தகை எம் சுவாமி. தைரியம், வீரியம், சாந்தி, சுகத்துடன் வாழ மார்க்கம் ஒன்றுண்டு. அதுவே யோகம் எனப் பலரும் அறிய வாய்ப்பேற்பட்டது.

சுவாமி சும்மா இருப்பதில்லை. விடியற் காலை நான்கு மணிக்கே நீராடி யோகப் பயிற்சிகளை செய்ய ஆரம்பிப்பார். மாணவர்கள் நேரத்தைக் கடைப்பிடித்து சுவாமியிடம் யோக ஆசனங்களைக் காலையும் மாலையும் பயின்று செல்வர். சுவாமி தன்னுணவை தாமே செய்து உண்பார்.

மிகப் பிரியமான நண்பரும் மாணவரும் அழைத்தால் மறுக் காமல் அவர்களிடம் அமுதுண்ணுவார். சுவாமி பல யோக ஆசனப் போட்டிகளை வைத்து மாணவர்களை உற்சாகமூட்டினார். பல்வேறு பாடசாலைகளில் யோகப் பயிற்சிகளைத் தன் மாணவர்களைக் கொண்டு நிகழ்த்தி யோகத்தைப் பரப்பினார்.

யோக கருத்தரங்குகள், கண்காட்சிகள் விழாக்கள் என்பன மிகச் சிறப்பாக மாணவர்கள் மற்றும் திவ்யஜீவன சங்கத்தினர், நலன் விரும்பிகளின் உதவியுடன் நடாத்தப் பட்டன.

### மீண்டும் மட்டக்களப்புக்கு திரும்பலும் இறைபதம் எய்தலும்

1995ஆம் ஆண்டு சுவாமி மட்டக்களப்பிற்குத் திரும்பினார். மீண்டும் பல முயற்சிகளை மேற்கொண்டு யோகத்தை ஸ்தாபிக்க விளைந்தார்.

1997 ஆம் ஆண்டளவில் சுவாமி திருகோணமலையில் பலத்த ஆதரவுடன் யோகக் கலையை வளர்த்தார். இறைபதம் எய்துவதற்கு சில வருடங்களுக்கு முன் சுவாமி தன் தாய் மண்ணாகிய மட்டக்களப்பிற்கும் சென்றார். பெப்ரவரி மாதம் ஆறாம் திகதி 2008 ஆம் ஆண்டு தனது 90 ஆம் வயதில் சுவாமி இறைபதம் எய்தினார்.

### ஆங்கிலத்திலும் தமிழிலும் பிரசுரங்கள்

சுவாமி இலங்கை வாழ் மக்களுக்கு மட்டுமன்றி இவ்வுலகத்தார் அனைவரும் இலகுவில் யோகக் கலையைப் பயிலும் வகையில் "இலகுவான ஆசன செய்முறை", "சிதானந்த யோகாசன செய்முறை-24", ஆங்கிலத்தில் யோக ஆசனங்கள் பற்றிய நூல், பல பிரசுரங்கள், செய்திகள், யோகம் பற்றிய கட்டுரைகள் எமக்குத் தந்துள்ளார்.

சுவாமியின் கைங்கரியத்தில் தம் மாணவர்களில் மிகச் சிறந்தவர்களும், யோக ஆசன நுட்பங்களை ஆழமாகக் கற்றவர்களுமான சில குறிப்பிட்ட மாணவ மாணவர்களுக்கு சுவாமி பட்டமளிப்பு விழா ஒன்றை நடாத்தி, 'யோக பிஷக்' என்ற பட்டத்தையும் கேடயங்களையும் வழங்கினார்.

சுவாமி மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற இடங்களிலும் இவ்வாறு பல மாணவர்களுக்கு சான்றிதழ் கள் வழங்கி கௌரவித்துள்ளார். யோக ஆசனக் கலையை பாடத் திட்டத்தில் சேர்ப்ப தற்காக கல்வியமைச்சுடன் சேர்ந்து செயற் பட்டு ஆவன செய்தார்.

இவை சில வருடங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

திருமதி சண்முகயோகினி ரவீந்திரன்
தலைவர், ஆங்கில மொழி பயிற்சி நிலையம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

### இவரின் பணியைத் தொடரும் சிஷ்யர்கள்

இன்று இலங்கையில் மட்டுமன்றி கனடா, ஜேர்மனி போன்ற மேற்கைத் தேசங்களிலும் சுவாமியின் சிஷ்யர்கள் பலர் இலைமறை காயாக இருந்து யோகக் கலையை செவ்வனே செய்து வருகிறார்கள்.

எத்தனையோ ஆயிரம் மக்கள் நாள்தோறும் யோகக் கலைமூலம் மன அழுத்தம், மனநெரிசல், மனக் கவலை நோய், உபாதைகள் என்பவை நீங்கி மனச் சாந்தி, தேகாரோக்கியம் பெற்று மகிழ்ச்சியாக இருக்க வழி சமைத்தவர் எம் சுவாமி.

எம் குருநாதரின் 90 ஆண்டு கால நீண்ட ஆயுள் கொண்ட நோய் நொடியற்ற, கவலையற்ற, ஆனந்தமான ஆத்ம வழியிலான வாழ்க்கையே இவ்வுலக மக்களுக்கு யோகக் கலை ஓர் அரிய பொக்கிஷம் என்பதை எடுத்துக் காட்டும்.

எம் சுவாமி எம் பூர்வ ஜென்ம புண்ணியங்களால் எம் நாட்டிற்கு கிடைத்த உத்தம உதாரண புருஷர் ஆவார். அவரது ஆத்மா பரமாத்மாவுடன் ஐக்கியமாக பிரார்த்திப்போமாக. □

# சினிமாத் துளிகள்

ஒளிப் பதிவாளர்கள் எம். எஸ். பிரபுவும், கே.வி.ஆனந்தும் ஒரேநாளில்தான் பி.சி.ஸ்ரீராமிடம் உதவியாளர்களாக சேர்ந்தார்களாம்.

தமிழகம் முழுவதும் அறுபதுக்கும் மேற்பட்ட இடங்களில் ஒரே நேரத்தில் விஜகாந்த் நடிக்கும் 'அரசாங்கம்' படத்தின் பாடல்கள் வெளியீடு நடைபெற்றது.

'வேதா' படமும் தனக்கு திருப்புமுனையை ஏற்படுத்தாததால் இனி சொந்தமாக தயாரித்து இயக்கும் படத்தில் நடித்து வெற்றி பெறப்போவதாக தெரிவித்திருக்கிறார் நடிகர் அருண்விஜய்.

'இன்பா' படத்தில் கவர்ச்சியாக நடித்திருக்கும் படம் வெற்றி பெறாததால் இனி தமிழில் கவர்ச்சியாக நடிப்பதில்லை என்று முடிவெடுத்திருக்கிறார் சினேகா.

தமிழ் படங்களின் எண்ணிக்கை கூடிய அளவிற்கு அதன் வீரியம் கூடவில்லை என்று நிஜமாக கவலைப்படுகிறார் கவி. பேரரசு வைரமுத்து.

சிங்கள இயக்குநர் பெரிஷ் இயக்கிய 'பிரபாகரன்' என்ற படத்தை தமிழகத்தில் வெளியிடக் கூடாது என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினர், சென்னையில் உள்ள தமிழ் திரைப்பட தயாரிப்பாளர் சங்கத்தினால் புகார் மனுவைக் கொடுத்துள்ளனர்.

பாக்ஸ் ஆபிஸ் என்ற புதிய நிறுவனம், 'தெய்வமகன்' என்ற பெயரில் படத்தைத் தயாரிக்கிறது. இதில் புதுமுகம் தேவ் நாயகனாக நடிக்க, அவரது ஜோடியாக நடிக்கிறார் மீரா ஜாஸ்மீன், வெற்றி என்ற புதியவர் கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்குகிறார்.



ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் நடைபெறும் பல சுவையான சம்பவங்களைக் கொண்டு உதயா பிலிம்ஸ் என்ற நிறுவனம் தயாரிக்கும் படம் தான் 'நிலவுக்கு என்னடி கோபம்' இதில் ஸ்ரீ, ஜானவி ஆகியோர் புதுமுகமாக அறிமுகமாகின்றனர். இந்தப் படத்திற்கு கதை, திரைக்கதை எழுதி இயக்குகிறார் தாஸ்.


'கல்லூரி' படம் வெற்றி பெறவில்லை என்றாலும் தன் சம்பளத்தை நாற்பது இலட்சமாக உயர்த்திவிட்டாராம் நடிகை தமன்னா.

இரண்டு வருடம் வரை நாயகனாக நடிப்பதில்லை என்று முடிவு செய்திருக்கிறாராம் இம்சை அரசன்.

நடிகர் சூர்யாவை திரையுலகத்திற்காக முதன் முதலில் புகைப்படம் எடுத்தவர் ஒளிப்பதிவாளர் கே.வி.ஆனந்த்தாம். இது சூர்யாவே வெளியிட்ட தகவல்.

# சினி விமர்சனம்



## 'சுந்தர் சி'யின் நடிப்புத் திறமைக்கு ஒரு மகுடம்

மாப்பிள்ளை காலத்து மசாலா படம்தான் சண்டை. சுந்தர் சி.யின் நடிப்பு திறமைக்கு அடுத்து ஒரு மகுடம் கிடைத்திருக்கிறது.

தனது மகளுக்கு (புதுமுகம் ராகிணி) கிராமத்தில் வைத்து திருமணம் நடத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் வெளிநாட்டில் இருந்து தாயகம் திரும்புகிறார் நதியா. மாப்பிள்ளையும் லண்டன் தான் ஆனால் திருமணத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நதியாவின் அண்ணன் அடுத்தடுத்து சிக்கல்களை ஏற்படுத்துகிறார். கடத்தல்களுக்கும் பஞ்சமில்லை சொன்ன திகதியில் என் மகளுக்கு என் விருப்பப்படி திருமணம் செய்து வைக்கிறேன் பார்! என்று சவால் விடும் நதியா, மகள் ராகிணியின் பாதுகாப்புக்காக பொறுக்கியாக சுற்றித் திரியும் சுந்தர் சி.யை நியமிக்கிறார். திருமண நேரத்தில் இந்த கல்யாணம் வேண்டாம் என்று மாப்பிள்ளை வீட்டார் ஜகா வாங்க விசுவாசியான வேலைக்காரரான சுந்தர் சியை திடீர் மாப்பிள்ளையாக்குகிறார் நதியா. கல்யாணம் முடிந்ததும் பார்த்தாயா உன் எதிர்ப்பை மீறி என் மகளுக்கு சொன்ன திகதியில் கல்யா ணம் செய்து வைத்து விட்டேன் என்று நதியா தனது அண்ண னிடம் கர்ஜிக்கிறார். உன் மகள் கழுத்தில் தாலி கட்டியவன் என் மகன்தான் என ஷாக் கொடுக்கிறார் சுந்தர் சியின் தந்தை. அதன் பின்னர் கதையில் மேலும் அனல் பறக்கிறது. உன்னோட என் மகளை வாழ விடமாட்டேன் என நதியாவும், வாழ்ந்து காட்டுகிறேன் என சுந்தர் சியும் எழுப்பும் சவால்களில் தியேட்டரே அதிர்கிறது. கிளைமாக்ஸ் எல்லோருக்கும் தெரிந்ததுதான்.

### சண்டை சமாதானத்தை வலியுறுத்தும் சண்டை

ஆறடி உயர அய்யனார் சிலை போல கம்பீரமாக தோன்றியிருக்கிறார் சுந்தர் சி. ஐந்தடி அரிவாளோடு மோத தயாராகும் வில்லனுக்கு சவால் விடும் காட்சிகளிலும் எட்டடி உயர அரிவாளோடு தோன்றும் காட்சியிலும் விசில் பறக்கிறது. தனது அமைதியான பேச்சிலும் ஆக்ரோஷத்தை கொட்டியிருக்கும் விதம் அருமை. புதுமுக நாயகி ராகிணிக்கு நடிக்க வாய்ப்புக் கொடுக்கவில்லையா அல்லது அவர் நடிக்கவில்லையா? என்ற கேள்விக்கு கடைசி வரை விடை தெரியாமல் போய்விடுகிறது.

நதியாவுக்கு கதாநாயகியாக நடிக்க யாராவது வாய்ப்புக் கொடுத்தால் இன்னொரு ரவுண்டு வருவார் போலிருக்கிறது. அழகின் ரகசியத்தை ரகசியமாகவே வைத்திருக்கிறார் போலும். அவரது வில்லத்தனத்தை பார்த்து ரசிகர்கள் கோபப்படுவதே அவரது நடிப்புக்கு கிடைத்த வெற்றி. அதற்காக மருமகனை குண்டுபோட்டு கொல்ல நினைப்பதெல்லாம் ரொம்ப ஓவர். சிம்மக்கல் சின்னக்கிளியாக வரும் நமீதா ரசிகர்களின் நெஞ்சில் நிற்கிறார்.


காமெடிக்காக வரும் விவேக் உண்மையாக நதியாவின் சொத்துக்களை அபகரிக்க நினைத்து வீட்டுக்குள் நுழைகிறார். அமெரிக்க மாப்பிள்ளையை விரட்டியடிக்க தோண்டுகிற குழியில் தானே விழுந்து தவிப்பது கலகலப்பு. ஆய் சங்க காமெடியில் மட்டும் கொஞ்ச நெஞ்சமல்ல.: ரொம்பவே அருவருப்பு. ஆனாலும் தியேட்டர் கலகலக்கிறது. நிஜ கலெக்டரையே மிஞ்சும் அளவுக்கு கலெக்டராகவும், நதியாவின் கணவராகவும் வந்து செல்கிறார் நெப்போலியன்.

பாராட்டப்பட வேண்டிய விஷயங்கள் சில இருக்கு. குறிப்பாக வசனம். அமெரிக்காவில் எல்லா உறவுகளையும் ஆன்ட்டி, அங்கிள் என்று இரண்டு வார்த்தைகளுக்குள் முடிச்சிடுறாங்க. ஆனா இங்கேதான் அத்தை, சித்தி, மாமா, சித்தப்பா, பெரியப்பா என்று ஏகப்பட்ட வார்த்தைகள் என்று தமிழ் கலாசாரத்தை கௌரவப்படுத்தியிருக்கும் வசனகர்த்தா ரவி மரியாவுக்கு பாராட்டுக்கள்.

சண்டை– யாருக்கும் காயம் இல்லை

---

**நடிப்பு:** பிருத்விராஜ், ப்ரியாமணி, ஆனந்தராஜ், ராஜீவ், திலகன்.
**தயாரிப்பு:** ப்யூச்சர் பிலிம்ஸ்.
**இயக்கம்:** வினயன்
**இசை:** எம். ஜெயச்சந்திரன்




நேர்மையான பொலிஸ்காரர் திலகன், தன் மகன் பிருத்விராஜை சப் இன்ஸ்பெக்டராக்க வேண்டும் என்ற இலட்சியத்துடன் இருக்கிறார். முன் விரோதம் காரணமாக பிருத்விக்கு சான்றிதழ் தர மறுக்கிறார் கமிஷனர் ஆனந்தராஜ். ஒரு கட்டத்தில் ஆனந்தராஜை கடத்திச் சென்று அடைத்து வைக்கிறார் பிருத்வி.

இதற்கிடையில் கமிஷனராக பொறுப்பேற்பவர் பிருத்விக்கு சான்றிதழ் தர, அவர் சப் இன்ஸ்பெக்டராகிறார். இரகசிய அறையிலிருந்து தப்பி வரும் ஆனந்தராஜ், பிருத்வியின் கண்களில் சிக்க அவருக்கு பைத்தியம் என முத்திரை குத்துகிறார். இதனால் பிருத்வி குடும்பத்தை அழிக்க திட்டமிடும் ஆனந்தராஜ், திலகனை கடத்திச் செல்கிறார். தந்தையை பிருத்வி மீட்டாரா? அல்லது ஆனந்தராஜுக்கு பலியானரா? என்பது அப்பாடா கிளைமாக்ஸ்!

பிருத்விக்கு பொலிஸ் உடுப்பை மாட்டிவிட்டு ஆக்ஷன் வேடம் கட்டியிருக்கிறாங்கள். கெட்டப் பொருந்தினாலும் ஆக்ஷனில் ஆக்ரோஷம் மிஸ்ஸிங். இது நம்ம ஏரியா என்பது போல் காதல் காட்சி வந்தால் மட்டும் ப்ரியாமணியுடன் நெருக்கமோ நெருக்கம்.

ரவுடிகளை விடுதலை செய்யச் சொல்லும் உயர் அதிகாரியை தனி அறைக்கு, தள்ளிச் சென்று கும்மாங் குத்துவிட்டு "உன்னோட விஷயம் எல்லாம் எங்கிட்ட இருக்கு, சி.எம்.கிட்ட சொன்னா உம் பதவி காலி'' என்று மிரட்டும் போது நறுக்கு தெறிக்கிறார் ப்ருத்வி.

ஹவாலா பணத்துடன் வரும் மந்திரி ராஜீவை நடுரோட்டில் வழி மறித்து முகத்திரையை கிழிப்ப தும் ஷாக். வயதானாலும் நடிப்பில் விரைந்து கொண்டு நிற்கிறார் திலகன். ஹீரோவிடம் அடிவாங்க வேண்டும் என்கிற சினிமா 'லா'வில் பலியாகியிருக்கிறார் ஆனந்த ராஜ்.

இரண்டு பொலிஸ் அதிகாரிகளின் 'ஈகோ'வை அம்பலப் படுத்தி இருக்கும் இயக்குநர் வினயன், ஒரே இடத்தில் கதையை கொண்டு போயிருப்பது'' போதும்டா சாமி என்கிறது. உயர் பொலிஸ் அதிகாரியை அவரது ஜூனியர் கடத்தி வைத்துக் கொண்டு மிரட்டுவது லாஜிக் இல்லாத மேஜிக். ப்ரியாமணி கவர்ச்சி ஆடையில் ஆடி, காமெடி இல்லாத குறையை போக்கியிருக்கிறார். படம் முழுவதும் அநியாயத்துக்கு கெட்ட வார்த்தைகள்.

### காதல் காட்சிகளில் நெருக்கமோ நெருக்கம்

---

## 'சத்யம்' படப்பிடிப்பில் விஷால் காயம்

ஜீ.கே. பிலிம் கார்ப்பரேஷன் சார்பில் விக்ரம் கிருஷ்ணா தயாரிக்கும் படம் 'சத்யம்' ராஜசேகர் இயக்குகிறார். இதில் பொலிஸ் அதிகாரி வேடத்தில் விஷால் நடிக்கிறார்.



இப் படத்திற்காக சென்னையை அடுத்த சோழவரத்தில் இரவு சண்டைக் காட்சி படமாக்கப்பட்டது. ரவுடிகள் சிலர் ஜீப்பில் தப்பிச் செல்ல அவர்களை துரத்திச் செல்லும் விஷால் துள்ளிக் குதித்து ஜீப்பில் ஏறும் காட்சி படமாக்க முடிவு செய்யப் பட்டது.

இச் சண்டைக் காட்சியை ஸ்டண்ட் ஷிவா அமைத்தார்.

காட்சிப் படி ஜீப் வேகமாக புறப்பட்டு செல்ல அதன் பின்னால் வேகமாக ஓடிய விஷால், துள்ளிய போது தவறி விழுந்தார். இதில் அவரது இடது முழங்கை மணிக்கட்டில் பலத்த காயம் ஏற்பட்டது.

வலியால் துடித்த அவரை உடனடியாக சென்னையில் உள்ள அப்பல்லோ மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு டாக்டர்கள் சிகிச்சை அளித்து காயத்துக்கு கட்டுப் போட்டனர். இதனால் படப்பிடிப்பு இரத்துச் செய்யப்பட்டது.

## 'சிம்பிளாக' சினேகா!



உடம்பை ரொம்பவே குறைத்துவிட்ட சினேகா, இப்போது புது ஸ்டைலுக்கு மாறியுள்ளார்.

கழுத்தில் விதவிதமாக தங்க நகை அணிவது வழக்கம். ஆனால், அவரது கழுத்தை சின்ன கருப்புக் கயிறுடன் கூடிய கடல் சிப்பி அலங்கரிக்கிறது.

இதைப் பாங்காக்கில் இருந்து வாங்கி வந்துள்ளார். 'இதென்ன கயிறு?' என்று அவரது தோழி ஒருவர் கேட்க, 'ஸ்டைலு கண்ணு ஸ்டைலு' என்றாராம் சினேகா.

## ரெட் அஜித் ஸ்டைலில் எஸ்.ஜே.சூர்யா



இயக்குநராக திரையுலகில் புகுந்து நடிகராக அவதரித்து ஜொலிக்கும் நடிகர்களில் குறிப்பிடத்தக்கவர் நடிகர் எஸ்.ஜே.சூர்யா. நடிப்பிலும், டயலாக்கிலும் தனக்கென்று தனி பாணியை கடைப்பிடித்து தனி ரசிகர்பட்டாளத்தையும் சேர்த்துவைத்துள்ளார். திருமகன், வியாபாரி என்று அடுத்தடுத்து பிளாப் படங்களை கொடுத்த எஸ்.ஜே. எஸ்., மீண்டும் டைரக்ஷனில் கவனம் செலுத்தியிருப்பதாக தகவல்கள் வெளியாயின. ஆனால் தற்போது அவர் நியூட்டனின் மூன்றாம் விதி என்ற படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். டைரக்டர் செல்வா இயக்கும் இந்தப் படத்தில் ரெட் அஜித் ஸ்டைலில் எஸ்.ஜே.சூர்யா தோன்றுகிறாராம்.

## தனுஷுக்கு ஜோடியாகிறார் தமன்னா



கேடி படத்தின் மூலம் கலையுலக சேவையை துவங்கிய தமன்னா, கல்லூரி படத்தின் மூலம் பிரபலமடைந்தார். தகதகக்கும் தங்க மங்கை என்ற செல்லப்பெயரை தட்டிச் சென்றுள்ள இந்தப் பதினெட்டு வயது பருவ மங்கைக்கு தற்போது வாய்ப்புகள் குவிந்து வருகின்றன.

தனது அழகுப் புன்னகையால் ரசிகர்களை வசீகரிக்க ஆனந்தத் தாண்டவம் படத்தில் நடித்து வருகிறார்.

அதற்கு அடுத்தபடியாக முன்னணி ஹீரோ சூர்யாவுடன் அயன் படத்தில் ஜோடி சேருகிறார். இந்நிலையில் நடிகர் தனுஷுடனும் ஜோடி சேர தமன்னாவுக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது. 1985 ஆம் ஆண்டு வெளியான ரஜினியின் படிக்காதவன் படத்தின் ரீமேக் படம் தான் தமன்னா நடிக்கவுள்ள புதுப்படம்.

# தென்னாபிரிக்க அணி இன்னிங்ஸ் வெற்றி; சொந்த மண்ணில் இந்தியா பரிதாப நிலை




(அகமதாபாத்)

இரண்டாவது டெஸ்டில் தென்னாபிரிக்க அணி இன்னிங்ஸ் மன்றும் 90 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது.

இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது.

இதில் முதலாவது போட்டி சமநிலையில் முடிவுற இரு அணிகளும் தொடரில் சமநிலையிலிருக்க இரண்டாவது போட்டி கடந்த 3ஆம் திகதி அகமதாபாத்தில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில்துடுப்பெடுத்தாடிய இந்திய அணி அதன் முதல் இன்னிங்ஸில் 76 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் அதிக பட்சமாக இர்பான் பதான் ஆட்டமிழக்காமல் 21 ஓட்டங்களையும் தோனி 14 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஸ்ரையன் 5 விக்கெட்டுக்களையும் நிற்னி 3 விக்கெட்டுக்களையும்




மற்றும் மோர்கல் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி நேற்று முன்தினம் இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் தனது முதலாவது இன்னிங்ஸில் 7 விக்கெட்டுக்களை இழந்து 494 ஓட்டங்களை எடுத்திருந்தது.

3ஆம் நாளான நேற்று ஆட்டம் ஆரம்பமானபோது தென்னாபிரிக்க அணி தனது ஆட்டத்தை இடை நிறுத்தி இந்திய அணியை இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாட அழைத்தது. இதில் ஆட்டமிழக்காமல் டி வில்லியர்ஸ் 217 ஓட்டங்களையும் ஜக் கலிஸ் 132 ஓட்டங்களையும் மற்றும் மக்கன்சி 42 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஹர்பஜன் சிங் 4 விக்கெட்டுக்களையும் சிறிசாந் 2 விக்கெட்டுக்களையும் கும்ளே ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்ப்பதற்கு 418 ஓட்டங்களை எடுக்கவேண்டும் என்ற இலக்குடன் தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி தென்னாபிரிக்க வேகப்பந்து வீச்சாளர்களின் பந்துகளை சமாளிக்க முடியாமல் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 328 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து இன்னிங்ஸ் மற்றும் 90 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது.

துடுப்பாட்டத்தில் கங்குலி 87 ஓட்டங்களையும் தோனி 52 ஓட்டங்களையும் இர்பான் பதான் ஆட்டமிழக்காமல் 43 ஓட்டங்களையும் மற்றும் லக்ஸ்மன் 35 ஓட்டங்களையும் எடுத்தனர். முன்பாக சேவாக் 17 ஜாபர் 19, ராவிட் 17 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

பந்துவீச்சில் ஸ்ரையன், நிற்னி ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் மோர்கல் 2 விக்கெட்டுக்களையும் மற்றும் கலிஸ், ஹரிஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

ஆட்டநாயகனாக ஆட்டமிழக்காமல்



இரட்டைச் சதம் விளாசிய தென்னாபிரிக்க அணியின் நடுத்தர வரிசை-துடுப்பாட்ட வீரர் டி வில்லியர்ஸ் தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட தொடரில் தென்னாபிரிக்க அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது.

தொடரின் மூன்றாவதும் இறுதியுமான தீர்க்கமான டெஸ்ட் எதிர்வரும் 11ஆம் திகதி கான்பூரில் ஆரம்பமாகின்றது. (5)

## நீல் மக்கன்சி காய்ச்சலால் அவதி

(அகமதாபாத்)

தென்னாபிரிக்க ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் நீல் மக்கன்சி காய்ச்சலால் அவதிப்பட்டு வருகிறார்.

அகமதாபாத்தில் நடைபெற்ற இந்தியாவுக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க வீரர் மக்கன்சி முதல் இன்னிங்சில் 42 ஓட்டங்கள் எடுத்தார். அதன் பிறகு அவர் மைதானத்துக்கு கைதாங்கலாக அழைத்து செல்லப்பட்டார் அவர் காய்ச்சலால் அவதிப்பட்டு வருவதாக தென்னாபிரிக்க அணியின் மருத்துவர் கூறியுள்ளார்.

எனினும் ஒரு சில தினங்களில் அவர் குணமாக்கிவிடுவார் என்றும் மருத்துவர் கூறியுள்ளார். சென்னையில் நடைபெற்ற முதல் டெஸ்டில் மக்கன்சி 94 மற்றும் 155 ஓட்டங்களை குவித்தது குறிப்பிடத்தக்கது. (5)

## 3–வது டெஸ்டில் சச்சின் இல்லை

(அகமதாபாத்)

தென்னாபிரிக்காவுக்கு எதிரான 3 ஆவது டெஸ்ட் போட்டியில் சச்சின் டெண்டுல்கர் விளையாடமாட்டார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை போட்டியில் ஏற்பட்ட தசை பிடிப்பு பாதிப்பு காரணமாக தற்போது அகமதாபாத்தில் நடைபெற்று வரும் 2 ஆவது டெஸ்ட் போட்டியில் சச்சின் டெண்டுல்கர் பங்கேற்கவில்லை.

இதனிடையே கான்பூரில் நடைபெறவுள்ள 3 ஆவது டெஸ்ட் போட்டியிலும் டெண்டுல்கர் விளையாடமாட்டார் என்று தனியார் தொலைக்காட்சி ஒன்று செய்தி வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியது. இதனை கிரிக்கெற் சபை மறுத்தது.

டெண்டுல்கர் 3 ஆவதுடெஸ்ட்டில் விளையாடமாட்டார் என்று கூறப்படுவது உண்மையல்ல என்று தெரிவித்துள்ள கிரிக்கெற் சபைச் செயலாளர் நிரஞ்சன் ஷா, டெண்டுல்கரின் உடல் தகுதியின் அடிப்படையில் அவர் 3 ஆவது டெஸ்ட் போட்டியில் விளையாடுவது பற்றி தீர்மானிக்கப்படும் என்றார்.

இன்று அல்லது 7ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்வு குழுவினர் கூட்டத்தில் தேர்வு குழுவினர் டெண்டுல்கரின் உடல் தகுதியை பரிசீலித்து அவரை டெஸ்ட் போட்டியில் பங்கேற்க செய்வது பற்றி முடிபெடுப்பார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

இதனிடையே தேர்வுக் குழுத்தலைவர் வெங்சர்க்கார், டெண்டுல்கரின் உடல் தகுதி பற்றி தமக்கு எந்த தகவலும் இல்லை என்று கூறியுள்ளார். இந்நிலையில் 3 ஆவது டெஸ்ட் போட்டியில் சச்சின் டெண்டுல்கர் விளையாடமாட்டார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

டெண்டுல்கருக்கு ஏற்பட்டுள்ள காயம் இன்னமும் முழுவதும் குணமாகவில்லை என்றும் அவர் 12 நாட்கள் வரை ஓய்வில் இருக்க வேண்டும் என்றும் உடற்பயிற்சி நிபுணர் பால்காலின்ஸ் கூறியுள்ளார்.

உடற்பயிற்சியின் நிபுணரின் இந்த அறிக்கையை அடுத்து டெண்டுல்கர் கான்பூரில் நடைபெறவுள்ள3ஆவது டெஸ்டில் விளையாட மாட்டார் என்பதும் உறுதியாகியுள்ளது. (5)

## இலங்கை முதல் இன்னிங்ஸில் 278; மேற்கிந்தியத் தீவுகள் அணி பதிலடி

(போட் ஒப் ஸ்பெயின்)

இரண்டாவது டெஸ்டில் இலங்கை அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் 278 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்



களையும் இழந்தது.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிவரும் மேற்கிந்தியத் தீவுகள் அணி நேற்று முன்தினம் இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 268 ஓட்டங்களை எடுத்திருந்தது.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை 2 டெஸ்ட், 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இத்தொடரின் முதலாவது டெஸ்டில் வெற்றி பெற்று இலங்கை அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்க தொடரின் தீர்க்கமான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் கடந்த 3ஆம் திகதி போட் ஒப் ஸ்பெயினில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதல்நாள் ஆட்ட நேர முடிவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 217 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

களத்தில் டில்சான் 58 ஓட்டங்களுடனும் சாமரசில்வா 37 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். ஆட்டத்தின் இரண்டாம் நாளான நேற்று முன்தினம் தொடர்ந்து ஆடிய இலங்கை அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் 278 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.


இதில் சிறப்பாக ஆடிய சாமரசில்வா 76 ஓட்டங்களையும் டில்சான் 62 ஓட்டங்களையும் மற்றும் வர்ணபுர 35 வாண்டொட் 30 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் எட்வோட்ஸ் 4 விக்கெட்டுக்களையும் பவல்,ரெயிலர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் மற்றும் பிரவோ ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிவரும் மேற்கிந்தியத் தீவுகள் அணி நேற்று முன்தினம் இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 268 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் ராம்நரேஷ் சர்வான் 57 ஓட்டங்களையும் சிமித் 47,சற்றக்கோன் 46 ஹைறல் 45 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் முரளிதரன் 3 விக்கெட்டுக்களையும் துசாரா 2 விக்கெட்டுக்களையும்



மற்றும் டெஸ்ட் அறிமுக வீரர் அமரசிங்க ; வாஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

போட்டியில் மூன்றாம் நாள் ஆட்டம் நேற்று (இலங்கை நேரப்படி இரவு) நடைபெற்றது. (5)

சுயநலம் என்ற நெருப்பானது – முதலில் மற்ற வர்களை புசிக்கிறது; பின்னர் தன்னையே புசிக் கிறது.

–ரஷ்யா

வலம்புரி

## தமிழகத்தில் திரண்ட தமிழ்த்திரையுலகம் பாரத தேசத்தை உடைக்குமா?

கர்நாடகத்தில் தமிழகத்தை சார்ந்தவர்கள் தாக்கப்படும் எதிரொலியாக, தமிழ் நாட்டின் நடிகர்கள் ஒன்று திரண்டு உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தியுள்ளனர்.

திரைப்பட நடிகர்கள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியமைக்கு அதீத முக்கியத்துவம் தேவையில்லை என யாரேனும் வாதம் செய்வார்களாயின் அதனை ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரை அது சாதாரண விடயமன்று.

ஏனெனில், தமிழகத்தின் அரசியல் என்பது திரைப்பட நடிகர்களால் தீர்மானிக்கப்படுவதாகும். அறிஞர் அண்ணாத்துரை முதல் தற்போதைய முதல்வர் கலைஞர் கருணாநிதிவரை திரைப்படத்தோடு தொடர்புடையவர்களே.

எம்.ஜி.இராமச்சந்திரன் தமிழகத்தின் பிரபலமான திரைப்பட நடிகராக விளங்கியவர். தமிழகத்தின் முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதா முதலமைச்சர் பதவியை எட்டிப் பிடிப்பதாற்கான ஒரே தகுதி அவர் ஒரு நடிகை என்பதாகவே இருந்தது.

ஆக, தமிழகத்தின் மாநில அரசென்பது திரைப்பட நடிகர்களின் ஆதிக்கத்திற்குட்பட்டதென்பதை மறுப்பதற்கில்லை.

நடிகர் விஜயகாந்தின் புதிய அரசியல் கட்சியின் வெற்றியும் சுப்பர் ஸ்ரார் ரஜனிகாந், ஆட்சி பற்றி ஏதேனும் ஒரு கருத்தைக் கூறினால் அதற்கு மக்கள் நூறுதடவை கூறியதாக மதிப்பளிப்பதும் தமிழகத்தின் பண்பாடாகிவிட்டது.

தமிழ்கத்தில் கர்நாடகப் பிரச்சினையை மையமாக வைத்து நடிகர்கள் உண்ணாவிரதம் இருந்ததற்குள் உள்நோக்கம் இல்லாமல் இல்லை. அதாவது இத்தனை தூரம் நடிகர்கள் ஏன் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிக்கவேண்டும்?

இதற்கு மாற்றீடாக அரசியல் நடவடிக்கைகள் ஏதேனும் இல்லையா என்ற வினா எழுவது நியாயமானதாகும்.

அதன் அடிப்படையில் நோக்கும்போது 75 ஆண்டு நிறைவை கொண்டாடிக் கொண்டிருக்கும் தமிழ்த்திரையுலகம் தமிழ் நாட்டை தனி நாடாக அமைக்க துணிந்துவிட்டது என்றும் அதற்கான ஓர் அங்குரார்ப்பணமே கர்நாடகாவில் இடம்பெறும் தமிழர்கள் மீதான தாக்குதல்களை கண்டிக்கும் வகையில் இடம்பெற்ற நடிகர்களின் உண்ணாவிரதப் போராட்டம் என்ற முடிபுக்கும் நாம் வரலாம்.

எதுவாயினும் இந்திய மத்திய அரசு ஈழத்தமிழர்களின் விடயத்தில் ஓர் தீர்க்கமான நடவடிக்கையை எடுத்து இனப்பிரச்சினையை தீர்த்து வைக்கத் தவறும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், பிரிந்துசென்று தனி நாடாக வேண்டுமென்ற எண்ணக்கரு தமிழகத்தில் வேகமாக வளர்ச்சியடைவதை எவராலும் தடுக்கவும், தவிர்க்கவும் முடியாது.

# சுதந்திரக்கூட்டமைப்பின் வீழ்ச்சிக்கு ஆரம்பமாக கிழக்கு மாகாண சபைத் தேர்தல் அமையும்

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபைத்தேர்தலானது ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு அரசாங்கத்தின் வீழ்ச்சிக்கான ஆரம்பமாக அமையும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூக் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மே மாதம் 10ஆம் திகதி நடைபெறவிருக்கும் கிழக்கு மாகாண சபை தேர்தலானது பல்வேறு விடயங்களுக்கு முன்னோடியாக அமைய இருப்பதுடன் 1993ஆம் ஆண்டு தென்பகுதியில் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலுக்கு சமாந்தரமாக இம்முறை கிழக்கு மாகாண சபை தேர்தல் அமைந்திருக்கும் .கிழக்கு மாகாண சபைத்தேர்தலானது எமக்கு பொதுத்தேர்தல் போன்றே உள்ளது என ஹக்கீம் கொழும்பு ஊடகம் ஒன்றிடம் கூறியுள்ளார்.

கிழக்கு மாகாண சபைத்தேர்தல் மூலம் கடுமையான செய்தி ஒன்று மஹிந்த ராஜபக்ஷ நிர்வாகத்திற்கு வழங்கப்படும்.

1993ஆம் ஆண்டு பிரேமதாசாவின் ஆட்சிக்காலத்தில் தென்பகுதி மாகாண சபைத்தேர்தலால் ஏற்பட்ட மாற்றத்தைப் போல இம்முறை கிழக்கு மாகாண சபைத் தேர்தல் மூலம் பாரிய மாற்றம் ஒன்று ஏற்படும்'என்பது எனக்கு உறுதி எனக் கூறிப் பிட்டிருக்கும் ஹக்கீம் அதிகாரத் கைப்பற்றிக் கொள்வது நோக்கம் இல்லை. தீய சக்திகளால் ஏற்படக்கூடும் அச்சுறுத்தல்களை தடுத்து நிறுத்துவதே இம் முறை கிழக்கு மாகாண சபைத்தேர்தலில் பங்கு பற்றியிருப்பதன் நோக்கம் என கூறியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் வெற்றியை தடுப்பதே எனது முதல் குறிக்கோள். தேர்தல் பிரசார நடவடிக்கை கள் சூடு பிடித்ததும் நாட்டில் காணப்படும் கடும்போக்கான சூழ்நிலையை தடுத்து நிறுத்துவதற்கு ஐக்கிய தேசியக்கட்சியை தவிர வேறு மாற்று இல்லை என்பதை அனைத்து சமூகத்தினரும் ஏற்றுக்கொள் வார்கள் என்பது எனக்கு உறுதி என்றார் அவர்.

கிழக்கு மாகாண தேர்தலில் தான் போட்டியிடத்தீர்மானித்ததால் அரசாங்கத்துக்கு உதறல் ஏற்பட்டுவிட்டது. அதனாலேயே தனக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பை குறைப்பதற்கு அரசாங்கம் முயற்சித்தது என முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் அந்த ஊடகத்திடம் சுட்டிக்கட்டியிருந்தார். எனக்கு அதிகரித்திருக்கும் ஆதரவை குறைக்கும் நோக்கில் பாதுகாப்பை குறைக்கவேண்டும் என அரசாங்கம் பிடியாக இருந்தது.எனக்கு ஏதாவது அசம்பாவிதம் நடந்தால் மகேஸ்வரன் மற் றும் ஏனையவர் களுக்கு நடந்தது என குற்றச்சாட்டை வேறொருவரின் மீது போடஅவர்கள் முயற்சிக்கின்றனர். அரசாங்கம்தான்



மகேஸ் வரனைக் கொன்றது என குற்றம் சாட்ட நான்வரவில்லை. அவர் கொலை செய்யப் படுவதற்கான சூழ்நிலையை அரசு ஏற் படுத்திக்கொடுத்தது என ஹக்கீம் கூறினார்.

கிழக்கு மாகாண சபைத்தேர்தலுக்கான வேட்பாளர்களை நியமிப்பதில் ஐக்கிய தேசியக்கட்சிக்கு சிக்கல் இருந்தது. இதனாலேயேஐக்கியதேசியக்கட்சியுடன்இணைந்து இந்த தேர்தலில் போட்டியிட முன் வந்ததாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூக்ஹக்கீம் அந்த ஊடகத்திடம் மேலும் தெரிவித்துள்ளார். (அ–5)

# சாதாரணதரப் பரீட்சை மோசடியில் ஈடுபட்ட 168 பேரின் பெறுபேறுகள் இடைநிறுத்தம்

## பரீட்சை ஆணையாளர் அனுர எதிரிசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

அண்மையில் வெளியிடப்பட்ட கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் 168 பரீட்சை மோசடிகள் பதிவாகியுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவிக்கின்றது. இந்தமோசடிகளுடன்தொடர்புடைய மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளை இடைநிறுத்தியுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றின் 14 மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் இவ்வாறான விசமத்தனமானநடவடிக்கையில் ஈடுபட்டதால் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

பரீட்சைமோசடிகள் தொடர்பான முழுமையான விசாரணை நடத்தப்பட்ட பின்னர் பெறுபேறுகளை வெளியிடுவது குறித்து, இறுதித் தீர்மானம் எடுக்கப் படவுள்ளது.

எவ்வாறாயினும் பெறுபேறுகளை வெளியிடும் காலப் பகுதி தொடர்பாக உறுதி யான தகவலை வெளியிட முடியாது என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்தார். (அ–7)

# மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்த பின்னர் 740 பேர் காணாமல் போயுள்ளனர்

## யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்ற 2005ஆம் ஆண்டு நவம்பர் காலப்பகுதியிலிருந்து இதுவரை யாழ்ப்பாணத்தில் 740 பொதுமக்கள் காணாமல் போயிருப்பதாக முறைப்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஆயிரக்கணக்கான பொதுமக்கள், மனித நேயப்பணியாளர்கள் , ஊடகவியலாளர்கள் சட்டவிரோதமான முறையில் கடத்தப்பட்டு கொல்லப்பட்டு அவர்களின் சடலங்கள் கிணறுகள், வீதியோரங்களிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. பல காணாமல் போதல்கள், கடத்தல்கள் குறித்து உள்ளூர் பொலிஸ் நிலையங்களில் மாத்திரம் முறைப்பாடுகள் மேற்கொள்ளப் பட்டிருந்ததால் பல காணாமல் போதல்கள் குறித்து தகவல்கள் தமக்கு கிடைக்கப் பெறவில்லை என யாழ் .மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2008ஆம் ஆண்டின் முதற்காலாண்டுப் பகுதியில் யாழ். குடாநாட்டில் 27 பேர் காணாமல் போயுள்ளனர். 2005ஆம் ஆண்டு டிசம்பர் முதல் 2007 ஆம் ஆண்டு டிசம்பர் வரையான காலப் பகுதியில் 714 பேர் காணாமல் போயிலுள்ளனர் என யாழ். மனித உரிமை ஆணைக் குழுவின் அறிக்கை கூறுகிறது.

2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 50 பேர் கடத்தப்பட்டிருந்ததுடன் நவம்பர் மாதம் 46 பேர் காணாமல் போயுள்ளனர். அந்த வருடத்தில் கூடுதலாக இடம் பெற்ற கடத்தல் சம்பவங்களாக இவை பதிவு செய்யப்பட்டுள்ளன.

2007ஆம் ஆண்டு மார்ச் மாதம் 40 பேர் காணாமல் போய் இருப்பதாக யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பெரும்பாலானவர்கள் வீடுகளிலிருந்து கடத்திச்செல்லப்பட்டிருந்ததுடன் பலர் அலுவலகங்களிலிருந்தும் புறப்பட்ட போதும் வீடுகளை சென்றடையவில்லை என முறைப்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக யாழ். மனித உரிமைகள் ஆணைக் குழு வட்டாரத்தகவல்கள் கூறுகின்றன. பலவந்தமாக இடம்பெயரச்செய்யும் சம்பவங்கள் தொடர்ந்தும் யாழ். குடாநாட்டில் இடம்பெற்று வருவதாகத் தெரியவருகிறது.

2007ஆம் ஆண்டு ஜனவரி முதல் 547 பேர் கொல்லப்பட்டதுடன் 396 பேர் காணாமல் போயிருந்ததாக பொதுமக்கள் கண்காணிப்புக் குழு, சுதந்திரஊடக இயக்கம் உள்ளிட்ட சிவில் அமைப்புக்கள் இணைந்து மேற்கொண்ட ஆய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதேவேளை ஊடகவியலாளர்கள் பணியாற்றுவதற்கு மிகவும் மோசமான இடமாக யாழ் குடாநாடு அமைந்திருப்பதாக இலங்கைக்கு விஜயம் மேற்கொண் டிருந்த் ஊடகக் கண்காணிப்புக் குழுவினர் கூறியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (அ–5)

# எம்மோடு தங்கும்

ஒருவனைப் பற்றி அறிய வேண்டும் என்றால் அவன் சேர்ந்திருக்கும் கூட்டத் தையும் மனிதர்களையும் அறிந்தாலே போதும். அதாவது ஒருவனுடைய உயர்வும் தாழ்வும் அவன் சேர்ந் திருக்கின்ற கூட்டத்தின், மக்களின் தன்மையைப் பொறுத்து அமைகின்றது.

அவன் திருடர்கள் கூட்டத்தோடு சேர்ந்திருப்பின் திருடனாகத்தான் இருக்க முடியும் .அறிஞர்கள் கூட்டத்தில் சேர்ந் திருந் தால் அறிஞராகத்தான் இருக்க முடியும். இதற்கு மாறாக இருக்க முடியாது. இதுதான் நம்முடைய அனுபவம்.

அதேபோல இயேசுவை அறிய வேண்டும் என்றால் நாம் அவரோடு தான் சேர வேண்டும். வேறு வகையில் சொல்ல வேண்டும் என்றால் இயேசுவோடு சேர்ந்திருப்பவர் இயேசுவாகத் தான் இருக்க முடியும். அதாவது அவரைப் போல் மறைகளை அறிந்தவராகவும் தந்தை மீது அன்பு கொண்டவராகவும் ஏழைகள் மீது பற்றுக்கொண்டவராகவும் அமைதி ஏற்படுத்தும் தன்மை கொண்டவராகவும் இருக்க முடியும்.

எனவே இயேசுவையும் அவரின் மீட்புச் செயல் களையும் ஒருவன் அறிந்து கொள்ள வேண்டும் என்றால் ஒன்று அவன் இயேசுவோடும் தங்கவேண்டும் அல்லது இயேசு அவனோடு தங்க வேண்டும்.



### பரமபிதா காட்டிய பாதை

கடவுள் எங்கும் இருக்கின்றார். ஆனால் எங்கும் இருக்கின்ற கடவுளை நம் அருகில் நம் மத்தியில் அழைத்து தங்க வைத்தால் நம்முடைய அறியாமை அகன்று ஐயங்கள் தீர்ந்து இயேசுவைக் கண்டு அவரின் மீட்புச் செயல்களைப் புரிந்து கொள்வோம்.

இயேசுவை நம்மோடு தங்க வைப்போமா? நாமும் இயேசுவுடன் தங்குவோமா? அவரைக் கண்டு கொள்வோமா.

ஜோன்ஸ்ரொபேர்ட்

## பஞ்சலிங்க...

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது.

அன்னாரின் இல்லதில் இன்று காலை 9 மணிக்கு இறுதிக் கிரியைகள் நடைபெற்று பூதவுடல் காலை 10 மணிக்கு யாழ்.கல்வி வலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் காலை 11 மணிக்கு அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில் தகனக் கிரியைகள் இடம்பெறும்.

ஆசிரியராகவும் அதிபராகவும் யாழ்ப்பாணக் கல்விச் சமூகத்திற்குச் சேவையாற்றிய பஞ்சலிங்கம், நீண்ட காலமாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்துடன் இணைந்து தமிழ் ஆசிரியர்களின் உரிமைக்காகக் குரல் கொடுத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-5)

## மடு மாதாவின் திருச்சொரூபத்...

இவ் விசேட கூட்டம் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள மன்னார் ஆயரின் இல்லத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் தலைமையில் நேற்று நடைபெற்றது.

மன்னார், வவுனியா மறைமாவட்டங்களைச் சேர்ந்த 36 அருட் தந்தையர்கள் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். மடு அன்னையின் திருச்சொரூபம் தற்போது தற்காலிகமாக படையினரின் கட்டுப்பாடற்ற மன்னார் மறைமாவட்டத்தின் வடமத்தியில் கடைசிப் பங்கான தேவன்பிட்டி புனித சவேரியார் ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் மறைமாவட்டத்திலுள்ள சகல தேவாலயங்களிலும் திருப்பலிப் பூஜை முடிந்ததும் மடு திருப்பதியை சமாதான பிராந்தியமாகப் பிரகடனப்படுத்தக் கோரி பங்கு மக்களிடம் கையெழுத்துக்களைப் பெற்று அவற்றை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் அனுப்பி வைப்பது,

சகல தேவாலயங்களிலும் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் உண்ணா நோன்பு நோற்பது, விடுதலைப் புலிகளை நாளை சந்தித்து மடு சம்பந்தமான பிரச்சினைகளைப் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்துவது எனவும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. (ந-5)

## வன்னியை...

புலிகள் தரப்பில் 5 பேரும் இராணுவத்தரப்பில் ஒருவர் கொல்லப்பட்டிருப்பதாகவும் ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற மோதலில் 8 விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டதாகவும் 5 பேர் காயமடைந்திருப்பதாகவும் தெரிவித்திருக்கும் தேசிய பாதுகாப்பு ஊடக நிலையம், நேற்றைய மோதலில் பாதுகாப்புப் படைப் பிரிவை சேர்ந்த நால்வர் காயமடைந்து சிகிச்சை பெற்று வருவதாக கூறுகின்றது. (ந-5)

## தியாகிகள் தினத்தை விமல் வீரவன்ச பகிஷ்கரிப்பு

(கொழும்பு)

ஜே.வி.பியின் தியாகிகள் தினம் நேற்று மாலை கொழும்பு விஹாரமாதேவி பூங்காவில் இடம்பெற்றது. இந்த நிகழ்வு ஆரம்பமாவதற்கு முன்னர் நேற்றுக் காலை ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் லால்காந்த ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்,

நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச கட்சியின் மத்திய குழுவில் இருந்து தற்காலிகமாக விலக்கியதாக வெளிவந்த தகவல்களில் எவ்வித உண்மையுமில்லை என்று தெரிவித்தார்.

இதனையடுத்து நேற்று மாலை இடம் பெற்ற ஜே.வி.பியின் தியாகிகள் தினத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச பங்கேற்பார் என்றே பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது. எனினும் அவர் அந்த நிகழ்வில் பங்கேற்கவில்லை. (ந-5)

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் யோசேப் பூராசா

(அ.இ.சமாதான நீதிவான், ஓய்வு பெற்ற அதிபர் தரம் I, தலைவர் கிராம அபிவிருத்திச் சங்கம், புங்குடுதீவு கிழக்கு, ஸ்தாபகர் தெய்வக் குழந்தைகள் இல்லம், புங்குடுதீவு, செயலாளர் புனித அந்தோனியார் ஆலயம், புங்குடுதீவு)



புங்குடுதீவு 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 97/11, இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் யோசேப் பூராசா 31.03.2008 இல் இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான சுப்பிரமணியம்-சின்னம்மா தம்பதிகளின் புதல்வனும், கந்தையா-சின்னம்மா தம்பதிகளின் மருமகனும் மங்கையற்கரசி (இளைப்பாறிய ஆசிரியை - புங்குடுதீவு மகா வித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும், கலையரசி, அன்பரசி (பிரதேச செயலகம்-யாழ்ப்பாணம்), நீதிராஜா ஆகியோரின் தந்தையும், ஜெயக்குமாரின் மாமனாரும்,

காலஞ்சென்ற நடராசா பிரான்ஸிஸ் சேவியர் (ஓய்வுபெற்ற அதிபர்) மற்றும் அருட்சகோதரி விக்ரரின் (ஓய்வுபெற்ற அதிபர்- திருக்குடும்ப கன்னியர் மடம், இளவாலை), காலஞ்சென்ற லீலாவதி (ஓய்வு பெற்ற ஆசிரியை), கோமளவல்லி (முன்னாள் முன்பள்ளி ஆசிரியை - தெய்வக் குழந்தைகள் இல்லம்) மற்றும் புவனேஸ்வரி, பழனிநாதன், லட்சுமணன் ஆகியோரின் சகோதரனும்,

காலஞ்சென்ற ராசமணி றெஜினா (ஓய்வு பெற்ற ஆசிரியை) மற்றும் சேவியர் ஸ்ரனிஸ்லஸ், காலஞ்சென்ற கந்தையா மற்றும் நாகரத்தினம், சரஸ்வதி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகள் இன்று (06.04.2008) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு அவரது யாழ்ப்பாண இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 9 மணிக்கு புங்குடுதீவுக்கு எடுத்துச் செல்லப்பட்டு மு.ப. 11.30 மணிக்கு அன்னாரது புங்குடுதீவு இல்லத்தில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்படும்.

பின்னர் பி.ப. ஒரு மணிக்கு அவரது பூதவுடல் ஆத்மா ஈடேற்ற திருப்பலி ஒப்புக் கொடுப்பதற்காக புங்குடுதீவு புனித அந்தோனியார் ஆலயத்தில் வைக்கப்பட்டு பின்னர் நல்லடக்கத்துக்காக புங்குடுதீவு மணற்காடு புனித அந்தோனியார் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
மங்கையற்கரசி (மனைவி)
குடும்பத்தினர்

(1070)

## இலங்கை இந்தியாவின்...

ஏப்ரல் புரட்சியின் 37 ஆவது ஞாபகார்த்த வைபவம் நேற்று மாலை கொழும்பு விகாரமகாதேவி பூங்காவில் நடைபெற்றபோது அங்கு அவர் உரையாற்றுகையில்,

இலங்கை அரசாங்கம் தம்மிடம் மட்டுமே ஆயுதங்களை வாங்க வேண்டும் என இந்தியா நிபந்தனை விதிக்கின்றது. இலங்கை இந்தியாவின் மாநிலம் அல்ல என்பதை அவர்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

வடக்குக் கிழக்கு மக்களுக்குப் பூரண சுதந்திரம் வழங்க வேண்டும். மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். அப்போது தான் அம்மக்கள் பிரபாகரனிடமிருந்து பிரிந்து வருவார்கள்.

மக்கள் விடுதலை முன்னணி கொண்டு வந்த 10 ஆயிரம் குளங்களை அமைக்கும் திட்டத்தை அமுல்படுத்தியிருந்தால் இன்று அரிசி விலை இந்தளவுக்கு உயர்ந்திருக்க மாட்டாது.

கிழக்கு மாகாணத்தில் தேர்தலில் போட்டியிடும் பொதுஜன ஐக்கிய முன்னணியும் படுதோல்வி அடையும். பொதுத் தேர்தல் ஒன்றை நடத்துவதற்காகவே அரசாங்கம் இந்தத் தேர்தலை நடத்துகின்றது.

பொதுத் தேர்தல் ஒன்று நடந்தால் அரசாங்கத்தைத் தோல்வியடையச் செய்து நாம் ஆட்சியைக் கைப்பற்றுவோம். இந்த அரசாங் கத்தின் ஊழல் மோசடி, களவு, கொள்ளை ஆகியன அதிகரித்து விட்டன.

நாம் ஆட்சியைக் கைப்பற்றியவுடன் இவற்றையெல்லாம் விசாரித்துக் குற்றவாளிகளுக்குக் கடும் தண்டனை வழங்குவோம். மிகின் எயார் நிறுவனத்தில் பல கோடி ரூபா கொள்ளையிடப்பட்டுள்ளது.

இப்போது எமிரெட்ஸிடமிருந்து விமான சேவை பொறுப்பேற்கப்பட்டுள்ளது. இதிலும் கொள்ளையே நடக்கப் போகின்றது. நாட்டில் பிரச்சினை ஏற்பட்டால் அரச தலைவர்களும், ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்களும் வெளிநாடுகளுக்கு ஓடி விடுகிறார்கள்.

நாம் ஆட்சியைக் கைப்பற்றியவுடன் அவர்களை எந்த நாட்டுக்கு அனுப்புவது என தீர்மானிப்போம். 1971 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் மகர்ராணிக்கு எதிராக அரசாங்கத்தைக் கவிழ்க்க சதி செய்ததாக மக்கள் விடுதலை முன்னணி தலைவர் அமரர் றோகன விஜயவீரவுக்கும் எமக்கும் எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

அவ்வாறெனின் 1948 ஆம் ஆண்டு எமக்கு சுதந்திரம் கிடைக்கவில்லை என்றே கூற வேண்டும். 1991 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி எமது நாட்டில் சுதந்திரத்திற்காகப் போராடியுள்ளோம்.

நாம் அன்று மேற்கொண்ட கிளர்ச்சி நாட்டின் விடுதலைக்காகவே. எனவே நாம் அன்று செய்தது சரியான நடவடிக்கையாகும். மக்கள் விடுதலை முன்னணிக்கு ஆயுதம் மீதும் நம்பிக்கையில்லை.

வெளிநாட்டவர்கள் எம்மை ஆக்கிரமிக்க வந்தால் அதனை எதிர்த்து ஆயுதம் ஏந்துவோம். இன்றைய பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க இந்த அரசாங்கத்தை விரட்டியடிக்க வேண்டும்.

தொடர்ந்தும் அவர்கள் ஆட்சி செய்தால் நாடு குட்டிச்சுவராகிவிடும். ஐக்கிய தேசியக் கட்சியினர் சட்டி, பானைகளை உடைத்து வருகின்றார்கள். சட்டி, பானைகளை உடைப்பதில் அர்த்தமில்லை. ஆட்சியை எம்மிடம் ஒப்படையுங்கள். நாம் நாட்டை வறுமையற்ற நாடாக மாற்றிக் காட்டுகின்றோம் என்றார். (ந-5)


இன்றே இணையுங்கள் எம்முடன்...

PC SYSTEMS
Total IT Solution Providers
Call: (021) - 4591525, 0777917790
ஆலடிச் சந்தி, யாழ் வீதி, மானிப்பாய்.


## கண்ணீர் அஞ்சலி

### தம்பிப்பிள்ளை பஞ்சலிங்கம்



(உதவிக் கல்விப் பணிப்பாளர், யாழ்.கல்வி வலயம். சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்)

தொழிலாளர் நலன் பேணி தோள்
கொடுத்த எம் நண்பா!
தொலைதூரம் சென்றனையோ
தொழிலாளர் நாம் பரிதவிக்க...

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்,
யாழ்ப்பாணம்.

(C-966)


YOGIS BEAUTY
Academy of Beauty Culture, Hair Dressing & Home Science

மீண்டும் யாழ்.நகரில் 'Yogis Beauty'
நிறுவனத்தின் சகல சேவைகளும் ஆரம்பமாகியுள்ளன.
❖ நவீன முறையிலான மணப் பெண் அலங்காரங்கள்
(இது எமது தனித்துவம் மிக்க விசேட சேவை)
'Bridal Make - up is our Speciality, with Latest Fashion Jewelleries'
❖ அழகுக் கலை, ஒப்பனை வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
'Beauty Culture, Make - up and Hair Dressing'
நவீன கற்பித்தல் முறையிலான பயிற்சி நெறிகள் ஒரு மாத காலத்தில் பயிற்சிகள் முடித்து Diploma சான்றிதழ்கள் வழங்கப்படும்.
ஆர்வம் உள்ளோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

ஆசிரியை;
திருமதி யோகினி சண்முகநாதன்
75, அம்மன் வீதி, நல்லூர்.
(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவில் முன்பாக)
யாழ்ப்பாணம்.
T.Phone
021 222 2796
077 7164923
(1069)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.04.2008இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.